விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (24.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பயங்கரவாதத்தை தடுக்க அரசாங்கம் ஒத்துழைக்கும்

## ஐரோ. ஒன்றியத்திற்கு அமைச்சர் பீரிஸ் தகவல்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மீதமுள்ள தரப்பினரால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரித்தல் ஊடாக இலங்கைப் பிரஜைகள் அச்சுறுத்தப்படுவதிலிருந்து காப்பாற்றவும், இலங்கைக்குள் மீண்டும் பயங்கரவாதம் உருவாகுவதை தடுப்பதற்கும் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற வழக்குடன் தொடர்புபட்ட தரப்பினருக்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு எதிராக ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், வெளிவவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 20ஆம் பக்கம் பார்க்க....

## வரவு செலவுத்திட்டம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு


(கொழும்பு)

2015-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்களுக்கு பாரிய நம்பிக்கையை ஏற்படுத்தும் கவர்ச்சிகரமான அறிவிப்புகளைக் கொண்ட வரவு செலவுத்திட்டமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்களின் கூடிய ஆதரவைப் பெறும் வகையில் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் கவர்ச்சிகரமான அபிவிருத்தி மற்றும் அறிவிப்புகள் உள்ள 20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் முக்கிய நகரங்கள் சர்வதேச தரத்தில் அபிவிருத்தி



### பாதுகாப்பு செயலர் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கின் முக்கிய நகரங்களை சர்வதேச தரத்தில் அபிவிருத்தி செய்ய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் செயற்படும் நகர அபிவிருத்தி அதிகார சபை இதற்கான திட்டங்களை வகுத்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 20 மாடிகள் கொண்ட உயரமான கட்டிடம் ஒன்றை அமைத்தல், அரச நிறுவனங்களின் சுற்றுச் சுவர்களை தகர்த்து திறந்த வெளிப் பூங்கா அமைத்தல், மட்டக்களப்பில் பாரிய கட்டிடங்கள் உட்பட 16 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மன்னாரில் சர்வதேச மட்டத்திலான விளையாட்டரங்கு மற்றும் பசுமைப் பூங்கா அமைத்தல் என்பன போன்ற செயற்திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக முல்லைத்தீவு, மன் 20ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனின் பெயரை உச்சரிக்கிறது அரசு

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு மிகவும் வேண்டப்பட்டவராக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இன்று மாறியுள்ளார் என்று தோன்றுகிறது. அவரது பெயரை ஒரு நாளைக்கு நூறுமுறை உசரித்து, இந்த அரசின் ஆட்கள் பொய் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் நீதிமன்ற இடைக்கால தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் புலிகளின் மீதான தடை நீக்கப்படவில்லை. 28 20ஆம் பக்கம் பார்க்க....

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## வாக்குறுதி அளித்த பின்பும் வழக்குத் தொடராதது ஏன்?

### விளக்கமளிக்க சட்டமா அதிபருக்கு பணிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதி ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதாக அறிவித்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடொன்றை விசாரித்த உச்சநீதிமன்றம் இது சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ் சங்கானைப் பகுதியில் வசிக்கும் புருஷோத்தமன் அரவிந்தன் எனும் கைதி தாக்கல் செய்த முறைபபாட்டை ஆராய்ந்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்பு வழக்கறிஞர் கடந்த 2013 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

ஆயினும் இதுவரை சந்தேக நபருக்கு எதிராக எந்த விதமான வழக்கும் வவுனியா 20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா ஆணைக்குழுவின் உறுப்பு நாடாக இந்தியா

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடாக இந்தியா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய உறுப்பு நாடுகளை தெரிவு செய்ய இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பிலேயே, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடாக இந்தியா மீண்டும் தெரிவாகியுள்ளது.

47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இந்தியாவின் பதவிக் காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இந்நிலையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளை தெரிவு செய்ய இடம் பெற்ற வாக்கெடுப்பில் இந்தியா, பங்காளதேஷ், கட்டார், தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் போட்டியிட்ட போதிலும், இந்தியா மாத்திரமே மீண்டும் உறுப்பு நாடாக தெரிவு 20ஆம் பக்கம் பார்க்க....

## அத்துமீறும் மீனவர்களுக்கு உரிய தண்டனை தேவை !

### சட்டமா அதிபருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் வடகடலில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்காக, கடற்தொழில் சட்டவிதிகளின் கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்று மன்னார் மற்றும் யாழ் மாவட்ட கடற்தொழில் சங்கத் தலைவர்கள் சட்டமா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கோரியுள்ளனர்.

மன்னார் மாவட்ட கடற்தொழில் சங்க சமாசங்களின் தலைவர் என்.எம்.எம்.ஆலம், யாழ் மாவட்ட கடற்தொழில் சங்க சமாசங்களின் தலைவர் அன்ரனி எமிலியான் பிள்ளை ஆகிய இருவருமே வட பகுதி கடற்தொழிலாளர்களின் சார்பில் இந்தக் கடிதத்தை தமது சட்டத்தரணி உபேந்திர குணசேகர அவர்களின் ஊடாக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்த 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விளக்கமறியலில் இருந்த ஆவா கடும் நிபந்தனைகளுடன் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல கொள்ளை, கொலைச் சம்பவங்களுக்கு காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆவா எனப்படும் விமலன் யாழ்.மேல் நீதி மன்றினால் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கண்ணகை அம்மன் கோவிலடி, இணுவில் மேற்கு இணுவிலை சேர்ந்த ஆவா எனப்படும் குமரேசரத்தினம் விமலன் என்பவர் கடந்த ஜனவரி 04-ம் திகதியன்று மேலும் 11 பேருடன் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கொள்ளை, கொலை சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுக்களுக்கு காரணமானவர்கள் என குற்றஞ்சாட்டுப்பட்டு 12 பேரும் 3 வெவ்வேறு வழக்குகளில் சந்தேகநபர்கள் ஆக்கப்பட்டனர்.

ஆவா தவிர்ந்த ஒரு வழக்கில் உள்ள 07 பேரும் யாழ்.நீதி மன்றினால் பொலிஸாரின் ஆட்சேபனையின்றி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆவா எனப்படும் விமலனும் மற்றும் மூவர் உட்பட 4 பேரும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தில் தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தினைப் புரிந்தவர்கள் எனக் கூறி வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது.

இவ் வழக்கில் ஆவா தவிர்ந்த ஏனைய மூவரும் பொலிஸாரின் எதிர்ப்பின்றி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆவா பிணையில் செல்வதற்கு பொலிஸார் தொடர்ந்தும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்ததோடு தீங்கு விளைக்கும் ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இவரினை பிணையில் விடுவிப்பதற்கு நீதவான் நீதிமன்றிற்கு அதிகாரமில்லையொன்றும் பொலிஸார் வாதிட்டனர்.

பிரதான சந்தேக நபரினை பிணையில் விடுவிப்பதற்கு நீதவான் நீதிமன்றிற்கு அதிகாரமின்மையால் யாழ்.மேல் நீதிமன்றில் சந்தேக நபரினை பிணையில் விடுவிக்கக் கோரி சந்தேக நபர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஊடாக மார்ச் 31-ம் திகதி பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

இவ் வழக்கில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் ஆவாவும் அவரின் சகாக்களும் வழங்கிய தகவலினடிப்படையில் அவரின் வீட்டில் பின்புறம் காணப்பட்ட வாழைத்தோட்டத்தில் 2 கைக்குண்டுகளும் கூரிய வாள்களும் கண்டுபிடிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ் அறிக்கையினை ஆதாரம் காட்டி வாதாடிய சட்டத்தரணி றெமீடியஸ், சந்தேக நபரின் வீட்டில் பின்புறம் வாழைத்தோட்டம் இல்லை எனவும் அதற்கு கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலினையும் பிணை விண்ணப்பத்தில்ஒரு ஆவணமாக சமர்ப்பித்தார்.

எனினும் அரச தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி, பொலிஸாரின் புலன் விசாரணையில் ஆவா பல்வேறு கொலை, கொள்ளைகளுடன் தொடர்புடையவர். அவரினை விடுவித்தால் பொதுமக்களின் சமாதானத்திற்கு சீர்குலைவு மற்றும் சாட்சியங்களிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என வாதாடி பிணை வழங்குவதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்.

சந்தேக நபர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கிராம சேவையாளரின் சான்றிதழையும் சமர்ப்பித்ததோடு 9 மாதங்களாக சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது அவருக்கு எதிராக இவ் வழக்கு தவிர்த்த வேறு எந்த விதமான வழக்கும் பொலிஸாரினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நீதிமன்றிலும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது இவ்வழக்கு புனையப்பட்ட வழக்கு என்றும் றெமீடியஸ் வாதிட்டார்.

நேற்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட இவ் வழக்கின் பிணை விண்ணப்பத்தினை ஆராய்ந்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் சந்தேக நபரினை பிணையில் செல்வதற்கு அனுமதித்தார்.

50 ஆயிரம் ரூபாய் காசுப்பிணையிலும் ஒரு இலட்சம் பெறுமதியான 3 ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்ததோடு சந்தேக நபர் எக் காரணம் கொண்டும் கோப்பாய் பொலிஸ் பிரதேசத்திற்குள் நடமாடவோ வசிக்கவோ முடியாது.

இவரது நடமாட்டத்தினை கோப்பாய் பொலிஸார், கோப்பாய் பிரதேச செயலகம், செயலகத்திற்குள் உள்ளடங்குகின்ற கிராம சேவையாளர்கள் கண்காணித்து அறிக்கை செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் காலை 9 மணிமுதல் 05 மணிக்குள் யாழ்.நீதவான் நீதிமன்றில் கையொப்பமிடப்பட வேண்டும்.

குறித்த வழக்கின் ஏனைய 11 சந்தேக நபர்களுடன் எக்காரணம் கொண்டும் சந்திக்கவோ கதைக்கவோ கூடாது நாட்டை விட்டு வெளியேறவும் முடியாது.

என பிணை நிபந்தனைகள் விதிக்கப்பட்டதோடு இப்பிணை நிபந்தனைகள் மீறப்பட்டால் பிணை அனுமதி இரத்துச் செய்யப்படும் சிறையில் அடைக்கப்படுவார் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். (எ-4)

# வாள் வெட்டில் இருந்து மகனை காப்பாற்றிய தந்தை

(யாழ்ப்பாணம்)

மகனை வாளால் வெட்ட வந்தவர்களிடமிருந்து மகனை பாதுகாக்கச் சென்ற தந்தை வாள்வெட்டுக்கு இலக்காகிய சம்பவம் யாழ்ப்பாணம், கந்தரோடையில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த தேவராசா முரளிதரன் (வயது 39) என்பவர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உடுவில் பகுதியில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை பகல் இரு குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த மோதலின் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் இரவு, கந்தரோடையில் வசிக்கும இளைஞன் ஒருவரை வாளால் வெட்டுவதற்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நால்வர், அவ்விளைஞனை வாளால் வெட்ட முற்பட்டுள்ளனர். இதன்போது, குறுக்கிட்ட குறித்த இள்ளஞனின் தந்தை மீது வாள்வெட்டு இடம்பெற்றதில் அவரது கழுத்து மற்றும் கைகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து, வாள்வெட்டை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கந்த சஷ்டி விரதகாலத்தில் தினமும் முற்பகல் 8 மணி முதல் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் அஷ்டோத்திர அர்ச்சனையும் மாலை 4 மணிமுதல் கந்தசஷ்டி உற்சவம் இடம்பெறும்.

கந்தசஷ்டி உற்சவகாலத்தில் ஆறாம் நாள் மாலை 5 மணிக்கு சூரசம்காரமும் மறு நாள் மாலை 4 மணிமுதல் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (எ-11)

# விஜய்க்கு பால் ரசிகர் பலி

(திருவனந்தபுரம்)

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் கத்தி படம் பார்த்துவிட்டு குதூகலத்தில் வெளியே வந்த ரசிகர் ஒருவர் விஜய்யின் மிகப்பெரிய காட்சிப் பதாகைக்கு பாலாபிஷேகம் செய்கையில் தவறி விழுந்து பலியானார்.

கத்தி படம் தமிழகம் தவிர கேரளாவிலும் பிரமாண்டமாக வெளியாகியுள்ளது. கேரளாவில் மட்டும் சுமார் 200 திரையரங்குகளில் படம் வெளியாகியுள்ளது.

கேரளாவில் ஓடும் ரயில்களில் முதல் முறையாக தமிழ் படமான கத்தியின் விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வடக்கன்சேரியைச் சேர்ந்த உன்னி என்பவர் புதன்கிழமை கத்தி படம் பார்க்க திரையரங்கிற்கு சென்றவரே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

# தீபாவளிக்கு 10 இலட்சம் வருமானம்

(யாழ்ப்பாணம்)

தீபாவளி பண்டிகைக்காக மாநகர எல்லைக்குள் கடைகள் அமைக்க இடங்கொடுத்து பெற்ற வாடகைகள் மூலம் யாழ்.மாநகர சபைக்கு 10 இலட்சத்து ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பண்ணைப பகுதி மற்றும் புல்லுக்குளத்தை அண்மித்த பகுதிகளில் தீபாவளி கடைகள் அமைப்பதற்கு அனுமதியளித்திருந்தோம்.

கடைகள் அமைத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தென்னிலங்கை வியாபாரிகள் ஆவார்கள்.

10 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட கடை அமைப்பதற்கு 15 ஆயிரம் ரூபாய் வாடகை அறவிடப்பட்டது.

மழை காரணமாக வியாபாரம் இடம் பெறாத சில வியாபாரிகளிடம் வாடகைகள் அறவிடப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# யாழில் 500 மி.மீ மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் நேற்று வரையில் 500.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாதத்தில் நேற்று 22ஆம் திகதி வரை 142.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதியப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கிடைத்த 81.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை விட அதிகமாக இருப்பினும், 2011 மற்றும் 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கிடைத்த மழைவீழ்ச்சியை விட குறைவானதாக காணப்படுகிறது.

2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 395.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 301.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் கடந்த வருடம் (2013) முழுவதும் 784.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதியப்பட்டுள்ளது. இந்த வருடம் நேற்று வரை 500.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதியப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் காலங்களில் கூடுதலான மழை வீழச்சி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# 9 மாதத்தில் 600 மில்லியன் தங்கம்

கடந்த ஒன்பது மாத காலப்பகுதிக்குள் சட்டவிரோதமாக தங்கம் கடத்த முயற்சித்தவர்களிடம் இருந்து 690 மில்லியன் ரூபா தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் எடுத்து வர முயன்ற மற்றும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல முயன்ற போது பிடிபட்ட தங்கத்தின் பெறுமதியே இதுவாகும். இதன் மொத்த எடை 130 கிலோ கிராம் என்று சுங்கத்திணைக்களம் அறிவித்துள்ளது.

தங்கம் கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் நூற்றுக்கும் அதிகமான சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்கம் கடத்துவதற்கு உடந்தையாக இருந்த விமான நிலைய ஊழியர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவை தவிர வடக்கு கடற்பிரதேசத்திலிருந்து கடற்படையினரும் பெருந்தொகையான தங்கக் கட்டிகளை அண்மையில் கைப்பற்றி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த தங்கக் கட்டிகள் இந்தியாவுக்கு கடத்திச் செல்வதற்காக மீனவர் படகுகளில் எடுத்துச் செல்லப்பட்டபோது கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி பரஞ்சோதி அன்னலக்சுமி



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி அன்னலக்சுமி நேற்றுமுன்தினம் (2014.10.22) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும் நிர்மலாதேவி (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி (யாழ்ப்பாணம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வைகுந்தவாசன், சுபாசினி, புவேச்சா, சுதா, அம்பிகைபாதன் (சோதி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சுமித்தா, வினித்தா, அருணன், அருண்யா, நிருஜா, நளினாசினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), அச்சுதன் (யாழ்.இந்துக் கல்லூரி), சுஜப்பிரியன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), சுஜானா, மயூரிசா, யுகேஷ், அபிஜே, அபேக்கரன், ஹருணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2014) முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:-
மருமகன்: அம்பிகைபாதன்
(சி-8840) 0778312284


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கீரோ ஹொண்டா (Hero Honda) 100ss மோட்டார் சைக்கிள் இல JQ ++++ விற்பனைக்கு உள்ளது. உரிமை உடன் மாற்றி தரப்படும்

தொடர்பு இல:-0711134726

(சி-8434)

## நிரந்தர தொழில்வாய்ப்பு

நம்பிக்கையோடு வாருங்கள். உங்களுக்கு வெற்றி நிச்சயம். பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளான கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/ பிளாஸ்டிக்/கோடியல்/பால்மா/கிளவுஸ்/... போன்றவற்றில் ✦உற்பத்தி ✦லேபல் ✦பொதியிடல் ✦தரம்பிரித்தல் ✦களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்/ பெண் உடனடியாக தேவை. சம்பளம் 18000/-, 32000/- + உணவுதங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள் குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில் வருகை அன்றே வேலை.

தொடர்புக்கு:-0776838231, 0771116770

(சி-8838)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை கொலை செய்ய ஐ.தே.க.சதித்திட்டம் தீட்டியது


## ஒப்புக்கொண்டார் சஜித்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொலை செய்வதற்கு இரண்டாம் நிலைத் தலைவர் மாத்தையாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதம் வழங்கியது என கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவிற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டது.

இந்த முரண்பாட்டை பயன்படுத்தி பிரபாகரனை கொலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி திட்டம் தீட்டியது. இதற்காக மாத்தையாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கியது.





மாத்தையாவின் ஊடாக பிரபாகரனை கொலை செய்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டமாக அமைந்திருந்தது.

இந்தத் திட்டம் வெற்றியளித்திருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்களை பாதுகாத்திருக்க முடியும். எனினும் துரதிர்ஷ்டவசமாக இந்த திட்டம் தோல்வியடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்தையாவை கொலை செய்தனர். போரின் போது வகுக்கப்படும் அனைத்து திட்டங்களும் வெற்றியளிப்பதில்லை.

போர் தந்திரோபாயங்கள் வெற்றியளித்தால் மக்கள் பாராட்டுவார்கள். தோல்வியடைந்தால் எல்லோருடைய விமர்சனங்களையும் எதிர்நோக்க நேரிடும். இதுவே உலக நியதி என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் சூரியவெள ரன்முதுவெள என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் தெரிவித்தார். (இ-3-5)

### யாழ். பருத்தித்துறையிலிருந்து அக்கரைப்பற்றுக்கு பேருந்துசேவை

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.


இன்று வெள்ளிக்கிழமை முதல் பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து மாலை6.30 மணிக்கு ஆரம்பமாகி கொடிகாமம், வவுனியா, மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரைக்கும் சேவையாற்றும். இதேவேளை அக்கரைப்பற்றிலிருந்து இரவு 9மணிக்கு மேற்படி சேவை ஆரம்பமாகி மட்டக்களப்பு, வவுனியா, கொடிகாமம் ஊடாக பருத்தித்துறை வரைக்கும் சேவையாற்றும் என இலங்கை போக்குவரத்துச் சபை வடக்கு பிரா ந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

### தங்க மணவறை அறிமுகம்

யாழ்.மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இந்தியக் கலைஞர்களினால் வடிவமைக்கப்பட்ட அழகிய தங்க மணவறை அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# அரசாங்கம் தமிழ்க் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுக்கு செல்ல வேண்டும்

## அமைச்சர் ராஜித வலியுறுத்தல்



**“(கொழும்பு) பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இடம்பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயக்கம் காட்டி வருகின்றது. வரலாற்று அனுபவங்களை கருத்திற் கொள்ளும் தமிழ்த் கூட்டமைப்பு சந்தேகத்தின் காரணமாக இந்த தயக்கத்தை வெளிக்காட்டுகின்றது. எனவே கூட்டமைப்பின் தயக்கத்தைப் போக்க அரசாங்கம் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெற தயக்கம் காட்டும் கூட்டமைப்பிடம் தொடர்ந்தும் அதில் பங்கெடுக்குமாறு கோரிக்கை விடுப்பதில் அர்த்தம் இல்லை. மாறாக நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.”**

இந்த விடயம் குறித்து அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் என்னதான் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தாலும் அரசியல் தீர்வை வழங்குவதன் மூலமே அந்த மக்களின் மனங்களை வெல்ல முடியும். இதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களின் அபிமானங்களை நிறைவேற்றக்கூடிய வகையிலான அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்காக அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளது. அனைத்துக் கட்சிகளினதும் பங்குபற்றுதலுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை நோக்கி நகர்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு சிறந்த இடமாகும்.

ஆனால் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயக்கம் காட்டிவருகின்றது. வரலாற்று அனுபவங்களை கருத்திற்கொள்ளும் கூட்டமைப்பு சந்தேகத்தின் காரணமாக இந்த தயக்கத்தை வெளிக்காட்டுகின்றது.

எனவே கூட்டமைப்பின் தயக்கத்தைப்போக்க அரசாங்கம் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன.

குறிப்பாக என்னதான் கூறினாலும் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு பாரிய தயக்கத்தைக் கொண்டுள்ளமை தெளிவாகிவிட்டது. எனவே தயக்கத்தை போக்குவதற்காக இருதரப்பு பேச்சுக்களை நடத்துவதே ஒரே வழியாகும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெற தயக்கம் காட்டும் கூட்டமைப்பிடம் தொடர்ந்தும் அதில் பங்கெடுக்குமாறு கோரிக்கை விடுபபதில் அர்த்தம் இல்லை. மாறாக நம்பிக்கையை ஏற்படுத்துவதே இங்கு முக்கியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-3)

## இராசி பலன்

24.10.2014
(ஐப்பசி 07, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு
பிரதமை பின்னிரவு -4.11 மணிவரை
சுவாதி பின்னிரவு -5.58 மணிவரை
இராகுகாலம் -10.32-12.02மணிவரை
சுபநேரம் 6.02.7.32 மணிவரை
முதலாம் ஐப்பசி வெள்ளி
ஸ்கந்த சஷ்டி விரதாரம்பம்

வளவன்

**மேடம்:** கந்தனை வழிபட்டு அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்து கொள்ள வேண்டிய நாள், விருந்தினர்கள் வருகையுண்டு, ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க வேண்டி வரலாம்.

**இடபம்:** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், தேகநலனில் புத்துணர்வு ஏற்படும், செய்தொழில் மேன்மையுண்டு, வழிப்பாட்டால் வளர்ச்சி கூடும் , புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள் , வாகன யோகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், சான்றோர் சந்திப்புண்டு.

**கடகம்:** வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் வரும் வழியைச் கண்டு கொள்வீர்கள்.

**சிம்மம்:** வெற்றிகள் குவிய தந்தனை வழிபட வேண்டிய நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** எந்த காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணமொன்று இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையுண்டு, பயணத்தைக் [illegible] நாள்.

**தனுசு:** சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சி எளிதில் கைகூடும், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்கள் நன்மை தரும்.

**மீனம்:** குடும்பத்தில் எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், முயற்சிகளில் சில தாமதம் ஏற்படலாம், தேக நல்னில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள நூலகங்களில் முதலிடம் பெற்ற

# யாழ். பொது சன நூலகத்திற்கு சுவர்ண புரவர விருது வழங்கல்


(கொழும்புத்துறை)

இலங்கையில் மிகச் சிறந்த பொது நூலகங்களில் யாழ். பொதுசன நூலகம் முதலிடத்தைப் பெற்று ஜனாதிபதி விருதான சுவர்ண புரவர விருதினை பெற்றுக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுடன் இணைந்து களனிப் பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இலங்கையில் மிகச் சிறந்த பொதுசன நூலகங்களுக்கிடையிலான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 21 ஆம்திகதி கொழும்பு பத்தரமுல்லையில் இடம்பெற்றது. இதன் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் இவ் விருது வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுநூலகமானது ஆசியாவிலுள்ள சிறந்த நூலகங்களில் ஒன்றாகப் போற்றப்பட்டுவரும் நிலையில் இந்த விருது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடபகுதியில் உள்ள அடையாளச் சின்னங்களில் ஒன்றாக போற்றப்படும் யாழ்ப்பாண பொதுநூலகம் இதற்கு முன்னரும் பல விருதுகளைப் பெற்றுள்ள அதேவேளை தகவல் களஞ்சியமாக திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-51)




நன்றி:-அதெரண

# தமிழ்ப் பொலிஸாரின் எண்ணிக்கையை சாவகச்சேரியில் அதிகரிக்க வேண்டும்

## நகரசபை பொதுக்கூட்டத்தில் தீர்மானம்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதோடு பொதுமக்களின் முறைப்பாடுகளை பதிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் என வலியுறுத்தி சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த கூட்டத்தில் சபை உறுப்பினர் அ.பாலமயூரனால் கொண்டு வரப்பட்ட மூன்று தீர்மானங்கள் கடந்த திங்கட்கிழமை சபையில் நிறைவேற்ற ப்பட்டுள்ளன. அந்த தீர்மானங்களில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன் தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதனால் மக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் இத னால் மக்கள் பல மணி நேரம் காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் சபையில் அத்தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த காலங்களாக இடம்பெற்று வருகின்ற வாள்வெட்டுச் சம்பவங்கள், கொள்ளைச்சம்பவங்கள், போதைப்பொருள் பாவனை மற்றும் சிறுவர் தொடர்பான பிரச்சினைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

இது தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன் பொது மக்கள் தமக்கு இடம்பெறும் குற்றச் செயல்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ நகராட்சிமன்ற தவிசாளர், உறுப்பினர் மற்றும் பொலிஸாரிடம் தெரிவிக்கலாம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மேலும் பொதுமக்களால் கட்டட அனுமதிப்பத்திரம் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது வீட்டுக் கட்டடத்துடன் மழை நீர் சேகரிப்புத் தொட்டில்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி கட்டட அனுமதிப்பத்திரத்தில் கட்டாயமாக இடம்பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட போதும் அதை நடைமுறைப்படுத்துவது இல்லை.

தற்போது உள்ள நீர்ப்பிரச்சினையை கருத்தில் கொண்டு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என தீர்மானம் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் நிலத்தடி நீர்ப்பாதுகாப்பிற்காக பொது மக்களால் அமைக்கப்பட்டு வரும் குழாய்க்கிணறுகள் பற்றி நகராட்சி மன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஏனெனில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படும் போது நன்னீரில் உவர் நீர் கலத்தல், மலக்கழிவு நீருடன் கலத்தல், நிலம் உவர் தன்மை அடைதல், மண்ணரிப்பு போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. இதனால் இது குறித்து அதிக கவனம் எடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அத்தீர் மானமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் விரைவில் நிறைவேற்ற ஆவன செய்யப்படும் என சபைக் கூட்டத்தின் முடிவில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-29)




## நடமாடும் சேவை நாவாந்துறையில்

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நாவாந்துறை சென்மேரீஸ் சனசமூக நிலைய மண்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், விவாகச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான ஆலோசனைகள் இல வசமாக வழங்கப் படவுள்ளன. எனவே இந்நடமாடும் சேவையில் தேவையுடைய பயனாளிகள் கலந்து கொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-51)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்த சஷ்டிக் கால உற்சவத்தை முன்னிட்டு இடம் பெறவுள்ள சொற்பொழிவில் விரதங்களும் மகிமைகளும் எனும் தலைப்பில் சைவப்புலவர் பண்டிதர் பொன். சுகந்தன் தினமும் மாலை 4.45 மணியளவில் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-3)



யாழ்.இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையில் வலிகாமம் கல்வி வலயத் தின் ஏற்பாட்டில் உடுவில் கோட்ட கட்டாய வரவுக்குழு உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் எனும் தலைப்பில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துஸ்மந்தவின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் சுன் னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் வெதசிங்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் கோபி கிருஷ்ணா மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கல்லாரி ஆகியோர் இணைந்து கருத் துரை வழங் குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.



# வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

(கரணவாய்)

யாழ். வடமராட்சி நெல்லியடியில் உள்ள இராஜகிராம சரஸ்வதி வித்தியாலய வீதி கடந்த 30 ஆண்டு காலமாக புனரமைக்கப்படாது காணப்படுவதாக அப்பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மழை காலத்தில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதாகவும் இதன் போது சீரான போக்குவரத்தினை மேற்கொள்ள முடியவில்லை எனவும் அப்பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த 1987 ஆம் ஆண்டு இலங்கை அமைச்சராக இருந்த பிரேமதாசவால் புதிதாக உருவாக்கப்பட்ட இவ் வீதியானது கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வீதியால் தினமும் பெரும் திரளான மக்கள் பயணித்து வருகின்றனர்.

இம் மக்களின் நன்மை கருதி இவ்வீதியைப் புனரமைத்து தரும்படி சில புத்திஜீவிகளால் கரவெட்டி பிரதேச சபையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்தமைக்கு அமைவாக கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் பால்ராஜ் இது தொடர்பாக அதிகாரிகளிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஆனால் இதுவரை இவ்வீதிப் புனரமைப்பு தொடர்பாக எந்த வொரு பணிகளும் இடம்பெறவில்லை. மழை காலத்தில் வெள்ளத்தினால் நிரம்பிக் காணப்படும் இவ்வீதியை பயன் படுத்துவதில் அப் பிரதேச மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எனவே கவனிப்பாரின்றி காணப்படும் இவ்வீதியை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாண மாலை

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 17 1/4
தகைமை/தொழில்: BDSC/ பல் மருத்துவர்
தொ.இ: B/2000

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 28 சூரிசெவ்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/2001

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 37 1/2 சூரிசெவ் 4 இல
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: B/2002

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 77 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்PR)
தொ.இ: B/2007

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 14 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2890

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 22 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு:பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/2896

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS
தொ.இ: G/2897

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 54 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2900

# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified Bidders for the construction and renovation works in the schedule below.

| work/Service Details | Nonrefundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation and Modification of Ward No 26 Female site as Ward No 21 | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C10 |
| Toilets Renovation of Ward No 27 | 500.00 | 47,000.00 | 91 | 2.30 | C8 |
| Construction of Corridor nearby Kitchen | 500.00 | 12,000.00 | 91 | 0.59 | C10 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 27.10.2014 until at 4.00 pm on 04.11.2014 during office hours. The payment shall be made to the shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 05.11.2014, late bides will be rejected. Bids will be open at Director's office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman), Regional Procurement Commitee, Teaching Hospital, Jaffna. 24/10/2014**

(அ-8835)

# மக்கள் வங்கி

### உதவி சட்ட அதிகாரி பதவி

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி - பிராந்திய தலைமை அலுவலகங்களில் நிலவும் உதவி சட்ட அதிகாரி பதவிக்கான வெற்றிடங்களுக்கு மக்கள் வங்கி தகுதியுள்ள இருவரை நியமிக்க விண்ணப்பங்களைக் கோருகிறது.

தகைமை

- விண்ணப்பதாரர் சட்டத்தரணியாகவும் அரச நொத்தாரிசாகவும் 32 வயதுக்குக் குறைந்தவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் பின்வருவனவற்றில் குறைந்தபட்சம் ஒரு வருட நீதிமன்ற அனுபவம் இருக்க வேண்டும்.

  சிவில் விடயங்கள், உறுதிகளைப் பரிசோதித்தல், உறுதிகளைத் தயாரித்தல் மற்றும் சட்ட ஆவணங்களை வரைதல். அத்துடன் அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரச நொத்தாரிசாக செயலாற்ற உத்தரவுப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

- LLB பட்டம் பெற்றிருத்தல், கணினி அறிவு, வங்கி அலுவல்கள் மற்றும் நிதிசார் சேவைகளில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

நியமனம் ஆரம்பத்தில் 02 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். தகைமையுள்ளவருக்கு ஒப்பந்த காலத்தில் அனைத்தும் அடங்கலாக மாதாந்தம் ரூ.30,000/- கொடுப்பனவு வழங்கப்படும். ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் பின்னர், வங்கி அவர்களுடைய செயலாற்றுகையை மதிப்பீடுசெய்து ஒப்பந்த காலத்தை நீடிப்பதா அல்லது வங்கியின் நிரந்தர பணியாட்தொகுதிக்கு உள்வாங்குவதா என்பதை வங்கி தீர்மானிக்கும். நிரந்தர பணியாட்தொகுதிக்கு உள்வாங்கப்பட்டதன் பின்னர், அத்தகைய ஊழியர்கள் கவர்ச்சிகரமான சம்பளம், மருத்துவ பயன்கள், ஊழியர் வீடமைப்பு கடன், வருடாந்த மிகையூதிய கொடுப்பனவு போன்வற்றிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் தாம் விண்ணப்பிக்கின்ற தொழிலுடன் தொடர்புடைய சாதனைகளையும் அநுபவங்களையும் பற்றிய விபரங்களுடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் உறவினரல்லாத நாம் தொடர்புகொள்ளக்கூடிய இருவரின் தொடர்பு இலக்கங்களையும் இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 07.11.2014 அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் அந்தரங்கமாகக் கையாளப்படும். எந்த விதத்திலும் ஆதரவு தேடுதல் தகுதியின்மையாகக் கருதப்படும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்)**
மக்கள் வங்கி - தலைமை அலுவலகம்
இல.75, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
கொழும்பு 02

PEOPLES BEST LOVED BANK OF THE YEAR 2006 2007 2008 2010 2011 2012
PEOPLES SERVICE BRAND OF THE YEAR 2008 2010 2011 2012

www.peoplesbank.lk


# மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்
## திரு.சந்தியோகு மைக்கல்தாசன்



2014.10.21 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி திரு.ஏ.ஏஆனந்தராஜா முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட திரு.சந்தியோகு மைக்கல்தாசன் (B.A, M.A (PDS), M.A(RP) அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு அவரது சமூக சமயப் பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

திட்டமிடல் உத்தியோகத்தர்- நகர அபிவிருத்தி அதிகார சபை)

மனதார வாழ்த்துவோர்:- நண்பர்கள்.

(8140)


# யாழ்.மாநகர சபையின் பகிரங்க கேள்வி அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான பழையபூங்கா சிற்றுண்டிச்சாலை 01.11.2014 திகதி முதல் 31.12.2015 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 31.10.2014 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.மாநகர சபையின் நானாவித இறை வரிப்பகுதியில் பகிரங்க ஏலம் கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

| சிற்றுண்டிச்சாலை | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|
| பழையபூங்கா சிற்றுண்டிச்சாலை | 63,000 |

இப்பூங்காவானது நகரின் மையப்பகுதியில் அமைந்திருப்பதுடன் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பூங்காவை பார்வையிடுவதற்காக மக்கள் வந்து போகும் பிரபல்யமான ஓர் இடமாகவும் காணப்படுவதனால் இச்சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்குப் பெறுபவர் தகுந்த சுகாதார முறைப்படி தரமாக நடத்துவதன் மூலம் தங்களின் நிறுவனத்திற்கு நல்லதோர் விளம்பரமாகவும் அமையும் என்பதையும் கருத்தில் கொள்ளவும். மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இல.0718628576)

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம். 23.10.2014

(அ-8836)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கபே அமைப்பு கண்டனம் வெளியீடு



(கொழும்பு)

கல்வித் துறையில் காணப்படும் சீரழிவுகளுக்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள் முன்னெடுத்த அமைதியான நடைபவனி மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்கு தலுக்கு கபே அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஒன்று நாட்டில் அறிவி க்கப்படவுள்ள நிலையில், அரசாங் கத்துக்கு எதிராக சமாதானமான முறையில் முன்னெடுக்கும் மாண வர்களின் நடவடிக்கையை கண் ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து அரசாங்கம் தடுத்துள்ளது. இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை வன் மையாகக் கண்டிப்பதாக கபே அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது எதிர்கால த்தில் எதிர்க் கட்சிகளின் அரசுக்கு எதிராக முன்னெடுக் கும் நடவடிக்கைகளு க்கு பயம்காட்டும் ஒரு முன்னெச்சரிக்கை நட வடிக்கை யாகும்.

உயர்கல்வி மாண வர்களின் பிரச்சினை தீர்ப்பதில் உயர் கல்வி அமைச்சின் நடவ டிக்கை திருப்தி யளிப்பதில்லை யெனவும் மேலும் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. (இ-3-5)

# அரசியலமைப்பு திருத்தம் குறித்த விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை

## ரத்ன தேரர் திட்டவட்டம்

19ஆவது அரசியலமைப்பு திருததம் தொடர்பான தமது கட்சியின் கொள் கையை எந்தவிலைக்கும் விற்க தயாரில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துர லியே ரத்ன தேரர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது கட்சியின் அரசியல் அமை ப்பு திருத்த யோசனை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய தாக குறிப்பிட்டார். இதன்போது குழு ஒன்றை நியமித்து அது தொடர்பாக ஆராய்வதாக ஜனாதிபதி உறுதிய ளித்ததாக தேரர் தெரிவித்தார்

அந்தக்குழு தமது பரிந்துரையை ஐந்து நாட்களுக்குள் வழங்கவுள்ளது.

எனினும் இதற்கிடையில் இடைக் கால உடன்பாடுகளுக்கு செல்ல தமது கட்சி தயாரில்லை என்று ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 150 |
| தக்காளி | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 120 | 80 | 100 |
| கரட் | 120 | 80 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 250 | 240 | 200 |
| லீக்ஸ் | 200 | 150 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 200 | 120 |
| போஞ்சி | 160 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 35 |
| தேசிக்காய் | 140 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35-45 |
| இராசவள்ளி | 150 | 130 | 160 |

# வெளிநாட்டு குற்றவாளிகளை திருப்பி அனுப்புவதில் தாமதம்

## பிரிட்டன் மீது குற்றச்சாட்டு

வெளிநாடுகளைச் சேர்ந்த பெரு மளவிலான குற்றவாளிகளை வெளி யேற்றுவதற்கு தவறிவருவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் மீது கடுமை யான விமர்சனம் முன் வைக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டுக் குற்றவாளிகளை அவர்களின் சொந்த நாடுகளுக்கு திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக கடந்த 2006ஆம் ஆண்டில் அறிவிக்கப்ப ட்டது.

எனினும், 2006ஆம் ஆண்டிலி ருந்ததை விட அதிகளவான வெளி நாட்டுக் குற்றவாளிகள் தற்போது பிரிட்டனில் இருப்பதாக பொதுச் செலவீனங்களை கண்காணிக் கின்ற தேசிய கணக்காய்வு அலுவ லகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் வாழ்கின்ற வெளி நாட்டுக் குற்றவாளிகளில் 700க்கும் மேற்பட்டவர்கள் தலைமறைவா கியுள்ளதாக அந்த அமைப்பு கண க்கிட்டுள்ளது.

இவர்களில் கிட்டத்தட்ட 60 பேர் பொதுமக்களுக்கு மோசமான ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடியவ ர்கள் என்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், வெளிநாட்டுக் குற்றவா ளிகள் தொடர்பில் தாம் திட்டவட்ட மான அணுகுமுறையையே கையா ள்வதாகவும், அவர்களை சொந்த நாடுகளுக்குத் திருப்பியனுப்பும் பணிகளை வேகப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்ப ட்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் அரசா ங்கம் கூறுகின்றது. (இ-3-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 172

### ராகுலன் பாலா

பேருந்தில் ஆண் பக்கத்தில் பெண் உட்கார்ந்தால் அது பெண் உரிமை..!!



பெண் பக்கத்தில் ஆண் உட்கார்ந்தால் அந்த ஆண் எருமை..!!

### பி.தாரணி




### தமிழ்மதி மானசா

இந்த உலகத்தில உள்ள முக்கால் வாசி பசங்க நாசமா போறதுக்கு காரணம் நண்பன் சொன்ன அந்த வார்த்தை தான்..!!



மச்சான் அவ உன்னைத்தான்டா பாக்குறா..!!

### ஆறுமுகம்

பொண்ணுங்க குழந்தையா இருக்கிற வரைக்கும் toys–ஐ தேடுவாங்க...



குமரி ஆனதும் boys–ஐ தேடுவாங்க... அவங்க வாழ்க்கையில விளையாட....

### தல தளபதி



உன் தலைமுடி இவ்வளவு நீளமா, அடர்த்தியா இருக்கே எப்படி?
காலையில ஷாம்பு போட்டுக் குளிப்பேன்...
சாயங்காலம் ஹேர் ஒயில் தடவுவேன்...
அப்போ நைட்டு?
கழற்றி ஆணியிலே மாட்டிடுவேன்

### கஜேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014

## மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

### வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி-I ஒரு மணித்தியாலம்

1.இன்று மனிதன் பெரும் போராட்டத்திற்கு உட்பட்டிருப்பது அவனது விருப்பங்களை நிறைவு செய்வதற்காகும். மனித விருப்பங்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிக.

1.உணவு, பாடசாலை, புத்தகங்கள் 2.ஆடை அணிகள், சோறு , பாதுகாப்பு
3.பஸ்வண்டி, கணனி, காப்புறுதி 4.வீடு, பாண், சுகாதாரம்

2.பின்வருவனவற்றுள் உற்பத்திப் பொருட்களை சரியாகக் காட்டும் தொகுதி

1.முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை
2.விவசாயம், கைத்தொழில்
3.பண்டம், பணம், சேவை
4.பொருள், சேவை, எண்ணம்

3.A-பணப்பாவனை B- கைத்தொழில் புரட்சி
C- பண்டமாற்று முறை D-இலத்திரனியல் வணிகம்
வணிகத்தின் பரிணாம வளர்ச்சியைச் சரியாகக் காட்டும் ஒழுங்கு

1,BCAD 2.CABD 3.CBAD 4.CDAB

4.வணிகம் என்பது இன்று பேசப்படும் பிரதான தலைப்பாகும். இதன் அடிப்படையாக அமைவது

1.உற்பத்திநுகர்வு 2.மனிததேவைகளும்விருப்பங்களும்
3.வியாபாரமும் துணைச்சேவைகளும் 4. பணப்பரிமாற்று விற்பனை

5.சட்ட ஆளுமை பெறும் வகையில் பதிவு செய்வதனால் ஏற்படுவது

1.வணிகத்திற்கு ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்படல்
2.வணிகத்திற்கு தனித்துவத்தினை பெற்றுக்கொள்ளல்
3.வணிகத்தினை சட்டபூர்வமாக ஆரம்பிக்க சந்தர்ப்பம் கிடைத்தல்
4.வணிகம் சட்டத்தின் முன்னிலையில் தனிநபராகக் கருதப்படும் நிலை ஏற்படல்

6.கூட்டுறவுச் சங்க அமைப்பை பதிவு செய்யும் உத்தியோகபூர்வ அதிகாரியாக அமைவது.

1. கூட்டுறவுச் சங்க பதிவாளர்
2.பிரதேச செயலாளர் காரியாலய சமூக சேவை அதிகாரி
3.உரிய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
4.உரிய மாகாண சபை முதலமைச்சர்

7.வணிகத் திட்டமொன்றை தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய பிரதான காரணியாக அமைவது,

1.வணிகத்தின் நிதி மற்றும் ஏனைய தேவைகளை நிறைவு செய்தல்
2.சந்தையின் தேவைகளை இனம் காணல்
3.பொருத்தமான வணிக சந்தர்ப்பத்தை இனம் காணல்
4.எதிர்பார்க்கப்படும் செலவீனத்தை இனம் காணல்

8.சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான காரணியாக அமைவது,

1.எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி கிரயம், வருமானம், எதிர்பார்க்கும் இலாபம்
2.கடந்த வருட இலாபம், விற்பனை செலவு, இலாபம்.
3.எதிர்பார்க்கப்படும் விற்பனை வருமானம், எதிர்பார்க்கப்படும் செலவுகள், எதிர்பார்க்கப்படும் இலாபம்
4.எதிர்வு கூறப்படும் வருமானம், விற்பனை அளவு, அலகு விலை

9.வணிகங்களின் அன்றாட நடவடிக்கைகளை நடத்திச் செல்ல தேவைப்படும் குறுங்கால நிதி அழைக்கப்படுவது,

1.காசு நிலுவை
2.வங்கி நிலுவை
3.உரிமையாண்மை
4.தொழிற்படு முதல்

10.வணிக வங்கிகள் அந்நிய செலாவணி விற்பனையின் போது வெளிநாட்டு நாணயங்களில் தட்டுப்பாடு காணப்படும் போது செய்யக்கூடியது,

1.வெளிநாட்டு நாணய விற்பனையை புறக்கணித்தல்
2.வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்கை ஆரம்பித்தல்
3.பிரயாணக் காசோலைகள், வங்கி ஆணைகள் வழங்குதல்
4.வேறு வணிக வங்கிகளுக்கு வாடிக்கையாளரை வழிகாட்டல்

11.வணிக வங்கியினால் வைப்புத் தொகையின் எல்லைக்கு உட்பட்டதாக வழங்கப்படும் இலத்திரனியல் அட்டை,

1.வரவட்டை
2.கடனட்டை
3.டெலர் அட்டை
4.மாஸ்டர் அட்டை

12.காப்புறுத்தப்பட்ட சொத்து ஒன்றுக்கு இழப்பு பெறும் போது காப்புறுதி செய்தவருக்கு மேலதிக இலாபம் பெறுவதனை தவிர்க்கும் எண்ணக்கருவாக அமைவது,

1.காப்புறுத்தும் உரிமை
2.இழப்பீட்டுத் தத்துவம்
3.உச்ச நம்பிக்கை தத்துவம்
4.மேற்படி அனைத்தும்

13.கீழே தரப்பட்டுள்ளவை தொடர்பாடலிற்காகப் பயன்படுத்தும் முறைகள் சிலவாகும்

A-கலந்துரையாடல் B-தொலைக்காட்சிப்பெட்டி
C-சுற்றறிக்கை D-ஒலிபெருக்கி
E-இணையம் F-Fax G-Memo ஆவணம்

மேற்படி முறைகளில் இலத்திரனில் தொடர்பாடல் முறைகளாக அமைவது

1.BADF 2.BEGD
3.BDEF 4.BCFE

14.அண்மையில் மலேசியாவின் ஆகாய விமானமொன்று பயணிகளுடன் காணாமல் போனது. இதற்கமைய போக்குவரத்து சாதனமொன்றை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய காரணிகளாக அமைவது,

1.பாதை, பாதுகாப்பு, சக்தி, கொள்வனவு
2.ஊடகம், கிரயம், பாதுகாப்பு, கொள்வனவு
3.கிரயம், கொள்வனவு, பாதுகாப்பு, வேகம்
4.பாதுகாப்பு, காப்புறுதி, சொகுசு, சக்தி

15.புது வருட காலத்தில் தைக்கப்பட்ட ஆடைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வணிகர்களுக்கு பெரிதும் உதவுவது களஞ்சியமாகும். இங்கு களஞ்சியத்தினால் நிறைவு செய்யப்படும் விசேட விடயமாக அமைவது,

1.உற்பத்தி நடவடிக்கையை தடையின்றி மேற்கொள்ளல்.
2.பருவகால உற்பத்திகளை பெற்று வைத்திருத்தல்
3.கேள்வி நிரம்பலுக்கிடையே சமநிலையைப் பேணல்
4.விசேட காலங்களில் ஏற்படும் கேள்விகளை பூர்த்தி செய்தல்

16.வணிகமொன்றின் சொத்தின் பண்பாக அமையாதது,

1.கடந்த கால கொடுக்கல் வாங்கல் வாயிலாக ஏற்படாமை
2.பொருளாதார பெறுமதி காணப்படல்
3.வணிகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படல்
4.வணிகத்தின் எதிர்காலத்திற்கு பயன்களை பெற்றுக் கொடுத்தல்

✢ 17, 18, 19 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் வழங்கப்பட்டுள்ளது

I.பெற்ற வங்கி கடன் மீளச் செலுத்தியமை ரூ 3000
II.செலுத்திய கட்டட வாடகை ரூ 5000
III.உரிமையாளர் சொந்தப் பணத்திலிருந்து ரூ 10000 நிறுவன பொறுப்பொன்றைத் தீர்த்தல்

17.மேலே தரப்பட்ட (I)ம் கொடுக்கல் வாங்கலிற்கமைவாக கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவுகளை சரியாக காட்டுவது

1. ரூ 3000 சொத்து, உரிமை குறைதல்
2.ரூ 3000 சொத்து கூடி சொத்து குறைதல்
3.ரூ 3000 சொத்தும் பொறுப்பும் குறைதல்
4.ரூ 3000 சொத்தும் பொறுப்பும் அதிகரித்தல்

18.மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல் (III) ற்கமைய கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவுகளை சரியாக காட்டுவது,

1.ரூ 10000 இனால் உரிமை, பொறுப்பு குறைவடைதல்
2.ரூ10000 இனால் சொத்து, பொறுப்பு குறைவடைதல்
3.ரூ10000 இனால் சொத்து, உரிமை குறைவடைதல்
4.ரூ 10000 இனால் சொத்து, உரிமை அதிகரித்தல்

19.மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் இலாபத்தில் ஏற்படும் விளைவு,

1.இலாபம் ரூ 8000 இனால் குறைவடைதல்
2.இலாபம் ரூ 5000 இனால் குறைவடைதல்
3.இலாபம் ரூ 18000 இனால் குறைவடைதல்
4.இலாபம் ரூ 13000 இனால் குறைவடைதல்

20.பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எதிர்ப்பதிவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமைவது,

1.காசோலை மூலம் செலுத்திய மின்சாரம் ரூ 1000
2.கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசோலை ரூ 4000
3.சொந்த தேவைக்காக வங்கியிலிருந்து பெற்ற காசு ரூ 1000
4.வணிகமொன்றின் பணம் ரூ 1000 வங்கியில் வைப்பு செய்தல்

21.காசேட்டு வங்கி நிரலின் செலவு மீதி குறிப்பது,

1.சொத்தாகும் 2.பொறுப்பாகும் 3.உரிமையாண்மையாகும் 4.செலவாகும்.

22.வங்கிக்கூற்று மூலம் அறியக் கூடியதாக அமைவது,

A-வைப்பு செய்யப்பட்ட காசோலை B-மறுக்கப்பட்ட காசோலைகள்
C-வங்கிக்கட்டணம் D-வழங்கி மறுக்கப்பட்ட காசோலைகள்

1.Aயும் Bயும் 2.A, B, C 3.A, B, D 4.மேற்கூறிய அனைத்தும்

பின்வரும் தகவல்கள் வினாக்கள் 23, 24 தொடர்பானவையாகும்.
சனத்தின் வியாபாரத்தில் 2013-03-31 திகதியில் காசேட்டு வங்கி மீதி ரூ 26 000. பின்வரும் காரணிகளால் அது வங்கிக்கூற்று மீதியிலிருந்து வேறுபடுகிறது.

1.வைப்பு செய்யப்பட்ட ரூ 4000 காசோலை மறுக்கப்படல்
2.வங்கி அறவிட்ட கட்டணம் ரூ 1500 காசேட்டில் பதியப்படாமை
3.வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 2800
4.இக்கணக்கிலிருந்து ரூ 6100 தவறுதலாக கொடுப்பனவு ஒன்று பதிவு செய்யப்பட்டிருத்தல்.

23.வணிகத்தின் திருத்திய காசேட்டு மீதியாக அமைவது

1.ரூ 14,400 2.ரூ 20,500 3.ரூ 23,500 4.ரூ 28,500

24.வங்கிக் கூற்றின்படி மீதியாக அமைவது,

1.ரூ 11,600 2.ரூ 23,800 3.ரூ 5,500 4.ரூ 17,200

25.வணிகத்தின் ஏடுகளில் பதிவு செய்யப்படும் கழிவாக அமைவது,

1.காசுக்கழிவு 2.வியாபாரக் கழிவு 3.கொடுத்த கழிவு 4.பெற்ற கழிவு

26."தில்" வணிகத்தின் 2014.06.01 திகதியிற்கு சில்லறைக் காசாளர் இடம் இருந்த காசு ரூ 250 ஆகும். அத்தினம் பிரதான காசாளரினால் சில்லறைக் காசு மீள் நிரப்பலுக்காக ரூ 1750 வழங்கப்பட்டது. வணிகத்தின் சில்லறைக் காசேட்டு வசக்கட்டாக அமைவது,

1.ரூ 1,750 2.ரூ 2,000 3.ரூ 250 4.ரூ 1,500

27.வணிகத்தின் கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களாக அமைவது,

1.அனைத்து கடன் கொள்வனவுகளும் ஆகும்
2.நடைமுறையல்லா சொத்துக்களின் கடன் கொள்வனவு
3.காசு, கடன் கொள்வனவு
4.விற்பனைக்கான பொருள் கடன் கொள்வனவு

28."அ" நிரலில் முதன்மை ஏடுகளும் "ஆ" மூல ஆவணங்களும் தரப்பட்டுள்ளன.

| அ | ஆ |
|---|---|
| 1.காசேடு | A-வரவுத்தாள் |
| 2.பொது நாட்குறிப்பு | B-செலவுத்தாள் |
| 3.வெளித்திரும்பல் நாளேடு | C-பற்றுச்சீட்டு, கைச்சாத்து |
| 4.உட்திரும்பல் நாளேடு | D-நாட்குறிப்பு கைச்சாத்து |

அ, ஆ நிரல்களை முறையாக இணைக்கும் போது பெறப்படும் சரியான விடை

1.CDBA 2.CABD 3.CDAB 4.DCBA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவை பாதுகாப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி



## அமைச்சர் டிலான் குற்றச்சாட்டு

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் அரசியல் தீர்மானம் அல்ல என்று ஐரோப்பிய ஒன்றியம் தன்னிச்சையாக தெரிவித்துள்ளமையானது அது அரசியல் தீர்மானமா? என்ற சந்தேகத்தை எங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளதா என்ற சந்தேகமும் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது இலங்கை அரசாங்கம் எந்தக் குற்றச்சாட்டையும்முனவைக்காத நிலையில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முடிவானது ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் சட்ட ரீதியான தீர்ப்பாகும். இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் எடுக்கப்பட்ட அரசியல் ரீதியான தீர்மானமல்ல என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையி லேயே அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அமைச்சர் டிலான் பெரேரா இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தில் விதிக்கப்பட்டிருந்த தடையானது அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பு என்பதால் அதனை எமது அரசாங்கம் விமர்சிக்கவில்லை. மாறாக கவலை தெரிவித்தது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் புலிகள் மீதான தடை நீக்கம் அரசியல் தீர்மானம் அல்ல என்று கூறி ஐரோப்பிய ஒன்றியம் தன்னிச்சையாக தற்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளமையானது தற்போது இது அரசியல் தீர்மானமா என்ற சந்தேகத்தை எம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

காரணம் இலங்கை அரசாங்கம் இந்த நீதிமன்றத் தீர்மானத்தை விமர்சிக்கவில்லை. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் தன்னிச்சையாக இது அரசியல் தீர்மானம் அல்ல என்று தெரிவித்துள்ளமையானது பல சந்தேகங்களுக்கு வழி வகுக்கின்றது. ஐககிய தேசிய கட்சியையும் அதன் தலைவரையும் பாதுகாப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு செய்கின்றதா? என்ற நியாயமான சந்தேகமும் எழுகின்றது என அவர் மேலும் தெரி வித்தார். (இ-3-5)

# பதவிகளுக்காக நாட்டின் நலனுக்கு குந்தகம் ஏற்படுத்தி விடமுடியாதாம்

## அமைச்சர் நவீன் தெரிவிப்பு

அற்ப பதவிகளுக்காக நாட்டின் நலனுக்குத் துரோகம் இழைக்க முடியாது என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

மறைந்த எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கவின் நினைவு தினம் நேற்று முன் தினம் கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் நவீன் திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எனது தந்தை காமினி திசாநாயக்க எப்போதும் பதவிகளை விட நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் அளித்தவர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது ஆளுங்கட்சியில் இருந்து கொண்டே அதனை எதிர்த்தார்.

பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, தனது அமைச்சுப் பதவி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் தியாகம் செய்தார்.

அதே போன்று நாடு கடும் நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார். துணிந்து ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார்.

அவரது மூத்தமகன் என்ற வகையில் நான் அவர் காட்டித் தந்த வழியை பின்பற்றுகின்றேன். நாட்டின் நலன் என்று வரும்போது பதவிகளைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை என்றும் அமைச்சர் நவீன் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நவீன் திசாநாயக்க அமைச்சுப் பதவியைத் துறந்து, எதிர்க்கட்சிக்கு மாறப் போவதாக செய்திகள் அடிபடும் நிலையில் அவரது உரை அதனை ஆமோதிக்கும் வகையில் அமைந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த வைபவத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-3-5)

# ஆதரவளித்ததற்காக வெட்கப்படுகின்றேன்

## ஆளும் தரப்பு எம்.பி ஆதங்கம்

(கொழும்பு)

18ஆம் திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது குறித்து வெட்கப்படுவதாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் ஆளுங்கட்சிக்குள் இழுத்துக் கொண்டு ஜனாதிபதி பதவியின் கால வரையறையை நீடித்துக் கொள்ள உதவும் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது.

குறித்த திருத்தச் சட்டத்தின் உதவியுடன் தற்போது ஜனாதிபதி மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றார். இதற்கிடையே ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்கு குறித்து ஆளுங்கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்நிலையில் ஆளுங்கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினரான வசந்த சேனநாயக்க, 18ஆம் திருத்தசட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது குறித்து வெட்கப்படுவதாத தெரிவித்துள்ளார்.

அண்மையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். (இ-3-5)

# குத்துவெட்டுகள் தான் எங்களின் தலைவிதி!

## அமைச்சர் ஜனகவின் கவலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக பாடுபட்டு உழைத்த தனது தந்தையை போன்றே தனக்கும் கட்சிக்கும் குத்து வெட்டுகள நடக்கிறது என்று அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கவலை தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் மாத்தளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார.

எனது தந்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர். கவிதைகள் அடங்கிய பத்திரிகை விற்பனை மூலம் தான் அவர் கஷ்டப்பட்டு தனக்கான வருமானத்தைத் தேடிக் கொண் டார்.

கட்சிக்குள் ஏராளம் வெட்டு குத்துக்களை அவர்எதிர்கொள்ள நேரிட்டது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு கட்சிக்காக தியாகத்துடன் செயலாற்றிய காரணத்தால் கடைசியில் அமைச்சுப்பதவியும் அவரைத் தேடி வந்தது என்றாா். (இ-3-5)

# இந்துக்களும் பௌத்தர்களும் ஒன்றிணைந்து மதங்களின் தனித்துவத்தினை பாதுகாப்போம்

## ஞானசார தேரர் அழைப்பு



(கொழும்பு)

கடந்த முப்பது வருடகால யுத்தத்தில் சிங்கள, பௌத்த மற்றும் தமிழ் இந்து இளைஞர்களே பெருமளவில் உயிரிழந்தனர். எனவே, இனியும் இந்நாட்டில் யுத்தம் வேண்டாம் பௌத்தர்களும் இந்துக்களும் ஒன்றுபடுவோம். நாட்டை கட்டியெழுப்புவோம் என்று பொதுபலசேனா தெரிவித்தது.

கிறிஸ்தவ, முஸ்லிம் அடிப்படைவாதிகளிடமிருந்து பௌத்தர்களையும் இந்துக்களையும் பாதுகாத்து மத மாற்றத்தை தடுப்போம் என்றும் இவ் அமைப்பு தெரிவித்தது.

பொதுபலசேனாவும் இந்து சம்மேளனமும் இணைந்து நேற்றுமுன்தினம் தீபாவளித் தினத்தன்று ஒரு மாதகால பௌத்த - இந்து ஒற்றுமை மாதத்தை பிரகடனப்படுத்தியதோடு அது தொடர்பான சமய அனுட்டானங்களும் கலந்துரையாடலும் தெகிவளை நெதிமாலை பௌத்த மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.

இதன்போது, பொதுபலசேனா இவ்வாறு தெரிவித்தது.

தெகிவளை விஷ்ணு கோவிலில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெற்றன. இங்கு உரையாற்றிய கலபொடஅத்தே ஞானசார தேரர்,

கடந்த முப்பது வருடகால யுத்தத்தில் சிங்கள, பௌத்த மற்றும் தமிழ் இந்து இளைஞர்களே உயிரிழந்தனர். அத்தோடு நாம் சந்தித்த இழப்புக்கள் கொஞ்சமல்ல. எனவே, இனியும் எமக்கிடையே மோதல்கள், முரண்பாடுகள், யுத்தங்கள் வேண்டாம். பௌத்தர்களும் இந்துக்களும் ஒன்று சேர்வதற்கு எந்த தடையும் கிடையாது.

விகாரைகளில் இந்துக் கடவுள் வழிபாடுகள் இடம் பெறுகின்றன. கோவில்களில் புத்தர் சிலைகள் உள்ளன. தாம் இறந்தாலும் எங்களுக்கு ஒரே மயானம் தான்.

இன்று எமது இரண்டு மதங்களைச் சேர்ந்தோர் கிறிஸ்தவர், முஸ்லிம் அடிப்படைவாதிகளால் மத மாற்றம் செய்யப்படுகின்றனர். இதற்கெதிராக ஒன்றுபடுவோம். எமது மதங்களின் தனித்துவத்தை பாதுகாப்போம். மத மாற்றத்தை தடுப்போம். இன்றிலிருந்து ஒரு மதத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தாது எமது ஒற்றுமையை தொடர்வோம்.

எதிரிகளும் எமது ஒற்றுமையை சகித்துக் கொள்ள முடியாதவர்களும் எம்மை பிரிப்பதற்கு பல்வேறு சூழ்ச்சிகளையும் பிரசாரங்களையும் முன்னெடுப்பார்கள். இதற்குள் நாம் சிக்கிவிடக்கூடாது என்றும் ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)

# மைத்திரிபால சிறிசேனவிற்கு பிரதமர் பதவியை வழங்குமாறு கோரிக்கை



சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு பிரதமர் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாக பிரதமர் பதவியை மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்குமாறு பொலனறுவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் நிறைவேற் றப்பட்ட போது சிரேஷ்ட அமைசசர்கள் சிலர் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, திஸ்ஸ கரலியத்த, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.


ஜனாதிபதி குடும்ப அரசியலில் ஈடுபட்டு வருவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை பொய்ப்பிக்கும் நோக்கில் பிரதமர் பதவியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவிற்கு வழங்காது, அமைச்சர மைத்திரிபால சிறிசேனாவிற்கு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தாம் தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வருவதாகவும் பதவியை வகிக்கத் தயார் எனவும் தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். (இ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்


103

..இந்தியா 285 ரன்கள் எடுத்தது. மீண்டும் ஆடி ஆஸ்திரேலியா 239 ரன்கள் எடுக்க இந்தியா வெற்றி பெற 395 ரன்கள் எடுத்தாக வேண்டும். ஆனால், துரதிஷ்டமாக இந்தியா 110 ரன்களுக்கு சுருள ஆஸ்திரேலியா 285 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. சச்சின் பூஜ்யத்தில் அவுட். ஆனால், மெக்ராத் வீசிய பந்தைத் தவிர்க்க சச்சின் தலை குனிந்தார். பந்து அவரது தோள் பட்டையில் பட்டுத் தெறித்து ஓடியது. விக்கெட் மீது பட வேண்டிய பந்தை சச்சின் தோள் பட்டையினால் தடுத்தார் என்று அம்பயர் சச்சினுக்கு எல்.பி. டபிள்யூ அவுட் கொடுத்தார். இவ்வாறு இரண்டு இன்னிங்சிலும் சச்சின் அம்பயரின் தவறான தீர்ப்பு காரணமாக ஆட்டம் இழக்க இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வி அடைந்தது. அம்பயரின் தீர்ப்பு ஆண்டவனின் தீர்ப்பு என்பதால் சச்சின் மௌனமாக வெளியேறினார்.

மெல்போர்னில் நடந்த இரண்டாவது டெஸ்டிலும் ஆஸ்திரேலியா 180 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால், இந்தப் போட்டியில் ஒரே ஒரு ஆறுதல் சச்சின் இருபத்தி இரண்டாவது செஞ்சுரியை அடித்து ஆஸ்திரேலிய ரசிகர்களை குஷிப்படுத்தினார். டெஸ்டில் தோற்றாலும் சச்சின் ஆட்டம் வெகுவாகப் பாராட்டப்பட்டது. அங்கு கூடிய 25,000 ரசிகர்கள் எழுந்து நின்று சச்சினைப் பாராட்டினார்கள்.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உலகமே புதிய புத்தாயிரம் ஆண்டைக் கொண்டாடிக்கொண்டிருந்தது. சச்சினைப் பொறுத்தவரை 1999 ஆம் ஆண்டு இன்பமும் துன்பமும் கலந்த ஆண்டாகவே ஓடி மறைந்தது. தந்தையின் மறைவு, உலகக்கோப்பைத் தோல்வி, கேப்டன் பதவி என்னும் முள் கிரீடம் என பல பிரச்சினைகள் இருந்தாலும் டபுள் செஞ்சுரி, ஒருநாள் போட்டியில் அதிக ரன்கள் ஆகிய சந்தோஷங்களும் இல்லாமல் இல்லை. ஆனாலும், இவை எல்லாவற்றையும் விட கூடுதல் சந்தோஷம் சச்சின் குடும்பத்தில் இன்னொரு ஜீவன். ஆம், இரண்டாவது குழந்தை அர்ஜுன் பிறந்தது இந்த ஆண்டில்தான்.

## ஆஸ்திரேலிய குழந்தைக்கு சச்சின் பெயர்!



சிட்னியில் மூன்றாவது இறுதிப் போட்டி நடைபெற்றது. இந்த டெஸ்டிலும் சச்சினுக்கு அம்பயர் தவறுதலாக எல்.பி.டபிள்யூ அவுட் கொடுத்தார். சச்சின் ஆட ஐந்து இன்னிங்சில் மூன்று முறை அம்பயர் கொடுத்த தவறான அவுட் காரணமாக அவர் வெளியேற வேண்டியதாயிற்று. வி.வி.எஸ்.லஷ்மன் செஞ்சுரி அடித்தும் பயனின்றி ஆஸ்திரேலியா ஒரு இன்னிங்ஸ் 141 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது. இதன் மூலம் 3-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியது. டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இடையே ஒருநாள் முத்தரப்புப் போட்டிகள் நடந்தன. ஒன்றைத் தவிர எல்லாவற்றிலும் இந்தியாவிற்குத் தோல்விதான். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் மட்டையில் படாத ஒரு பந்தை விக்கெட் கீப்பர் பிடிக்க அதற்கு அவுட் கொடுத்தார் அம்பயர். சச்சின் இங்கும் நொந்து போனார். இதைவிட இன்னும் ஒரு கொடுமையும் நிகழ்ந்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் ஏற்கனவே அம்பயரின் தவறான முடிவுகளால் ஆட்டம் இழந்தது மட்டுமன்றி தொடரையும் இழந்து நிற்கும் நிலையில் சச்சின் மீது பாகிஸ்தானின் அப்துல் ரசாக் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். ஆம், பந்தில் இருக்கும் நூல் தையலை விரல் நகத்தால் சேதப்படுத்திய பிறகே சச்சின் பந்து வீசுகிறார் என்ற பயங்கரமான குற்றச்சாட்டுத் தான் அது.

ஆஸ்திரேலிய நாட்டின் சின்னம் என்று கூறத்தக்க அளவிற்கு ஆஸ்திரேலியர்கள் பிராட்மென் மீது உயிரையே வைத்திருந்தார்கள். அப்பேர்ப்பட்ட பிராட்மெனின் மனம் கவர்ந்தவர் சச்சின் என்பதால் இயற்கையாகவே சச்சினை ஆஸ்திரேலியர்களுக்கு பிடித்துப்போனதில் வியப்பேதும் இல்லை.

(தொடரும்)

கே. ரமேஷ்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நீங்களே அன்பாகி விடுவீர்கள். நீங்களே அன்பாகிவிடும்போது உங்களைச் சுற்றி இருக்கும் அனைவரையும் அனைத்தையும் நோக்கி தானாகவே கருணையைப் பரப்ப ஆரம்பித்துவிடுவீர்கள். உங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களில் அதிகப் பொறுப்பெடுத்துக் கொள்வீர்கள். இந்தப் பொறுப்புணர்வு மக்களுக்குச் சேவை செய்யும்

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

அஹங்காரத்தினால் வருவதல்ல. மாறாக உங்களிடமிருந்து பொங்கிப் பிரவகிக்கும் சக்தியிலிருந்து வருவது.

அன்பும் பொறுப்புணர்வும் எப்பொழுதும் இணைந்தே செல்லும். நீங்கள் உண்மையிலேயே அன்பாக இருப்பீர்களானால், நீங்கள் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொள்வீர்கள். சந்நியாசிகள் பொறுப்பிலிருந்து தப்பி ஓடுபவர்கள் என மக்கள் நினைக்கிறார்கள். நான் சொல்கிறேன் உங்கள் சொந்த குடும்பத்திற்கான பொறுப்பைத் துறக்கும்பொழுது நீங்கள் ஒரு மிகப்பெரிய குடும்பத்திற்கான மனிதகுலம் முழுவதற்குமான உங்கள் குடும்பத்தை விட இலட்சக்கணக்கான மடங்கு பெரிதான குடும்பத்திற்கான பொறுப்பை ஏற்கிறீர்கள். இதனைப் புரிந்துகொள்ளாத மக்கள் விமர்சனம் செய்கிறார்கள்.

நீங்கள் எந்த அளவுக்குப் பொறுப்பெடுத்துக்கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு விரிவடைகிறீர்கள். பொறுப்பு என்பது சுலபமாகத் தட்டிக் கழித்து விடக்கூடியது. ஆனால், தட்டிக் கழிக்காமல் உங்கள் தோள்களில் ஏற்றிக்



கொண்டால் நீங்கள் விரிவடைவீர்கள். தெய்வீக சக்தி தானாகவே உங்களுக்குள் பாயும். [illegible] பிரவகிக்கும் [illegible] உணர்ந்ததால்தான் உங்களால் மேலும் மேலும் அதிக பொறுப்புகளை எடுத்துக் கொள்ள முடியும். ஆனந்த தியான சிகிச்சையாளர்களின் கூட்டத்தில், அவர்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பொறுப்பெடுத்துக்கொண்டு, அவர்களைச் சுற்றியுள்ள மக்களின் துயரங்களையும் [illegible] படுத்த வேண்டும் [illegible] நான் எப்பொழுதும் சொல்வதுண்டு.

உங்களைச் சுற்றியுள்ளவர்களின் வலிக்கு நீங்கள் பொறுப்பு என்பதை உணர்ந்துகொண்டால் அதை ஏதாவது ஒருவழியில் குறைப்பதற்கு நீங்கள் தானாகவே எழுந்து நிற்பீர்கள். மக்கள் அவர்களின் சொந்தக் குடும்பத்திற்கு ஏதாவது செய்தாலே போதுமானது என்று நினைக்கிறார்கள். இது விரிவடைவதற்கான வழியல்ல. சுருங்கிக்கொள்வதற்கான வழியாகும். நீங்

### ஆன்மீகம் 53

கள் வளர வேண்டுமானால் விரிவடைய வேண்டும். நீங்கள் பொறுப்புணர்வுடன் எழுந்து நிற்கும் பொழுது சக்தியைப் பரப்புகிறீர்கள். நீங்கள் பொறுப்பெடுத்துக்கொள்ளும் பொழுது பிரபஞ்ச இருப்புத் தன்மையானது தானாகவே உங்களுக்குள் பாயும். மக்கள் சொல்வார்கள், ஸ்வாமிஜி, நான் என் குடும்பத்தை ஒழுங்காக போஷித்து வர முடிந்தாலே போதுமானது என்று நான் சொல்கிறேன். இது உங்களைச் சுற்றி நீங்களே இறுக்கமான ஒரு எல்லைக் கோட்டை வரைந்து கொள்வதற்கான சாக்கு; உங்களைச் சுருக்கிக் கொள்வதற்கான ஒரு வழி.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மணிமேகலை வளர்த்த கிளி!

**தூ**ரத்தில் கிளிக்கூண்டைக் கையில் சுமந்தபடி சோதிடக்காரன் வருவதைக் கண்ட மணிமேகலை தன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தாள்.

சோதிடக்காரன் அருகில் வரும் வரை காத்திருந்தாள்.

கிளி ஜோஸ்யம்... கிளி ஜோஸ்யம் என்று அவன் குரல் கொடுப்பதும், கீச்... கீச்... என கிளி பதில் குரல் கொடுப்பதுமாக சற்றுநேரத்தில் மணி மேகலையின் வீட்டை வந்தடைந்தான்.

வீட்டுக்கு அருகில் அவன் வந்தவு டன் மணிமேகலை அவனைத் தன் வீட்டுத் திண்ணைக்கு வருமாறு அழைத் தாள்.

காலையிலிருந்து யாருமே தன்னி டம் சோதிடம் பார்க்கவில்லையே என்ற கவலையில் இருந்த சோதிடக் காரன் மிகவும் மகிழ்ந்து முகம்மலர அவள் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

என்னம்மா, உனக்கு சோதிடம் பார் க்கணுமா? பெரியவங்க யாரும் இல் லையா? முதலில் இப்படி உட்காருங்க... இந்தக் கிளி ஜோஸ்யம் சொல்லுமா?

இல்லையே! நான்தான் சொல்லு வேன்.

பிறகு ஏன் கிளி ஜோஸ்யம்னு சொல்கின்றீர்கள்?

ஒருவினாடி தடுமாறி நிதானமாய் பதில் சொன்னான்.

கிளி தானே சீட்டு எடுத்துத் தரும்?

ஏன், நீங்க எடுக்கக் கூடாதா?

என்னம்மா இது கேள்வி?

சரி, அதை விடுங்க, சீட்டு எடுத்துத் தந்தால் இந்தக் கிளிக்கு என்ன தரு வீங்க?

நெல் தருவேன்.

எவ்வளவு தருவீங்க?

தனக்கு ஏதோ பணவரவு என்ற ஆவலோடு உட்கார்ந்தவனுக்கு குழப் பம்தான் வந்தது.

ஏம்மா நீ என்ன ஜோஸ்யம் பாக் கலியா?

அது இருக்கட்டும். என் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள்.

உனக்கு என்னதான் வேண்டும்?

ஒண்ணுமில்லே, இந்தக் கிளி வேண்டும்.

என்னது கிளியா, என் பிழைப்பில் மண் அள்ளிப் போடப் பார்க்கிறியேம்மா. இந்தக் கிளியை வச்சித்தானே எனக் குப் பிழைப்பே நடக்குது.

அப்படியா, ஒரு நாளைக்கு எவ் வளவு கிடைக்கும்?

பத்து இருபது கிடைக்கும். என க்குப் போக வீட் டுக்கு கிளிக்குத் தீனிவேறு... என்று இழுத்தான்.

உங்களிடம் மொத்தமா ஒரு தொகையைத் தந்து விட்டால் கிளியை எனக் குத் தருவீர்களா?

கிளி அப்போது தான் நிமிர்ந்து கழுத்தை வளை த்து மணிமேக லையை வினோத மாகப் பார்த்தது.

சோதிடக்கா ரன் மனதுக்குள் கணக்குப் போட ஆரம்பித்தான்.

கிளிக்கும் வய தாகி விட்டது. விடவும் மனதி ல்லை. கணிசமான விலைக்கு கிளி யை விற்றுவிட் டால் சுப்ரமணி யன் வீட்டுக் கொல் லையில் பனை மரப் பொந்திலி ருந்து வேறு கிளி யைப் பிடித்துப் பழக்கிக் கொள் ளலாம். ஆனால், கொஞ்ச காலம் பிடிக்கும்.

என்ன யோசிக் கிறீங்க? மணி மேகலை கேட்டாள்.

ஒண்ணுமில்லை, எவ்வளவு தரு வாய்? இந்தக் கிளியால் எனக்குத் தினமும் கிடைப்பதுபோல உன்னால் தர முடியுமா?

சரி தருகிறேன்.

நூறுரூபாய் தருவியா?

சரி தருகிறேன். கிளியை மெல்ல வெளியே வரச்சொல்.

ஜோதிடக்காரனின் கண்களில் பிர காசம்.

ஒரே நேரத்தில் நூறு ரூபாயைப் பார்க்கப் போகும் மகிழ்ச்சி அவனி டம் தெரிந்தன. இதோ வெளியே வரச்சொல்கிறேன். பணத்தைக் கொடு என்றான் ஜோதிடக்காரன்.

கொஞ்சம் இரு! என்று சொன்ன மணிமேகலை வீட்டுக்குள் சென்றாள். அம்மா காய்கறி வைப்பதற்காக உப யோகப்படுத்தி வந்த கம்பிக்கூடை யைக் கையில் எடுத்துக்கொண்டாள். தீபாவளிக்குப் புதுத் துணி எடுப்பதற் காக அவள் சேமித்து வைத்திருந்த உண்டியலிலிருந்து நூறு ரூபாயை எடுத்தாள்.

ஜோதிடக்காரனிடம் வந்தாள்.

மிகவும் அவசரமாக நூறுரூபாயைக் கையில் வாங்கிக்கொண்ட ஜோதிடக் காரன் கூண்டுக்கு வெளியே தத்தித்த த்தி நகர்ந்து வந்த கிளியைப் பத்தி ரமாகப் பிடித்து அவளிடம் இருந்த கூடைக்குள் விட்டான்.

இடைப்பட்ட நேரத்தில் பறக்கமுய ன்ற கிளி ஒன்றுமே செய்ய இயலா மல் மணிமோகலையின் கூடைக்குள் சென்று கீச் கீச் என்று கத்தியபடி கம் பியை இறுக்கமாகப் பிடித்துக்கொண் டது. வெறும் கூண்டை எடுத்துக் கொண்டு வேகமாக எழுந்த ஜோதிடக் காரன் எதையோ நினைத்துக் கொண்ட வனாய்.........

(தொடரும்)






- ❖1260 - சார்ட்டேர்ஸ் கதீட்ரல் பிரான்சின் ஒன்பதாம் லூயி மன்னனால் திறந்து வைக்கப்பட்டது.
- ❖1260 - எகிப்திய சுல்தான் சாயிஃப் ஆட்டின் குத்தூஸ், பாய்பேர்ஸ் என்பவனால் கொலை செய்யப்பட் டான். பாய்பேர்ஸ் நாட்டின் சுல்தான் ஆனான்.
- ❖1648 - வெஸ்ட்ஃபாலியா அமைதி ஒப்பந்தம் முப்பதாண் டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- ❖1795 - போலந்து- லித்துவேனியன் கூட்டமைப்பு முற்றா கக் கலைக்கப்பட்டு ஆஸ்திரியா, ரஷ்யா, மற்றும ரஷ்யா ஆகியன தமக்குள் பங்கிட்டுக்கொண்டன.
- ❖1806 - பிரெஞ்சுப் படைகள் பெர்லின் நகரை அடைந்தன.
- ❖1851 - யுரேனஸ் கோளின் சந்திரன்கள் ஏரியல், உம் பிரியல் ஆகியன வில்லியம் லாசெல் என்பவரால் கண்டறியப்பட்டது.
- ❖1857 - உலகின் முதலாவது காற்பந்தாட்ட அணியான ஷெஃபீல்ட் காற்பந்தாட்ட அணி இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1912 - முதலாம் பால்க்கன் போர்: குமனோவா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் சேர்பியா வெற்றி பெற்றது.
- ❖1917 - ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி இடம்பெற்றது.
- ❖1929 - கறுப்பு வியாழன்: நியூயோர்க் பங்குச் சந்தையில் பங்குகள் சரிவு.
- ❖1930 - பிரேசிலில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது. அதிபர "லூயிஸ் பெரெய்ரா டெ சயூசா" பதவியுலிருந்து அகற் றப்பட்டார்.
- ❖1931 - ஜோர்ஜ் வோஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- ❖1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- ❖1943 - நாடு கடந்த இந்திய அரசு முறைப்படி பிரித்தானியா மீதும் அமெரிக்காமீதும் போரை அறிவித்தது.
- ❖1945 - ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1964 - வடக்கு றொடீசியா ஐக்கிய இராச்சியத்திடம் இரு ந்து விடுதலை பெற்று சாம்பியா என்னும் பெய ரைப் பெற்றது.
- ❖1973 - யோம் கிப்பூர்ப் போர் முடிவுக்கு வந்தது.
- ❖2003 - கான்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயண த்தை மேற்கொண்டது.
- ❖2007 - சந்திரனின் சுற்றுப்பாதையில் நிலவைச் சுற்றி வரும முதல் சீன ஆளற்ற விண்கலம் "சாங்-ஒன்று" தென் மேற்கு சீனாவின் ஏவுதளத்திலிருந்து வெற்றிகர மாக ஏவப்பட்டது.

பிறப்புகள

- ❖1632 - ஆன்டன் வான் லீவன்ஹூக், டச்சு உயிரியலாளர (இ. 1723)
- ❖1921 - ஆர்.கே.லட்சுமண், இந்திய ஓவியர்
- ❖1932 - ஸ்டீபன் கோவே, அமெரிக்க எழுத்தாளர் (இ. 2012)
- ❖1957 - இ. ஜெயராஜ், இலங்கை கம்பன் கழக அமைப்பா ளர்


இறப்புகள்

- ❖1601 - டைக்கோ பிரா, டேனிய வானியலாளர் (பி. 1546)
- ❖1870 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய, உரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (பி. 1807)
- ❖1994 - காமினி திசாநாயக்க, இலங்கை அரசியல்வாதி (பி. 1942)
- ❖2005 - றோசா பாக்ஸ், ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமை கள் செயற்பாட்டாளர் (பி. 1913)
- ❖2011 - ஜோன் மெக்கார்த்தி, அமெரிக்கக் கணினி அறி வியலாளர், உணரறிவியலாளர் (பி. 1927)
- ❖2013 - மன்னா டே, இந்தித் திரைப்படப் பாடகர் (பி. 1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2014 - 16.11.2014



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**மனதில் பட்டதை மறைக்காமல் பேசும் கும்ப இராசி நேயர்களே! தொழில் முன்னேற்றம் ஏற்படும் நேரம்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சனி 10 இல் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே, செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். சிறு சிறு பிரச்சினைகள் வந்து அலை மோதினாலும் குருவின் பார்வை பலத்தால் உடனுக்குடன் நிவர்த்தியாகும். நான்கு கிரகங்கள் பலம் பெற்று இரண்டு கிரகங்கள் பலமிழந்தும் இம்மாதத் தொடக்கம் அமைகிறது.

எனவே, வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வருமென்றே சொல்ல வேண்டும். குறிப்பாக 6இறகு அதிபதி 6இல் இருப்பதால் உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு. அதோடு தனலாபாதிபதி குருவும் இணைந்திருப்பதால் சம்பள உயர்வு, சலுகைகள் போன்றவைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மங்கல நிகழ்வுகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கடன் சுமை குறைவதற்கு புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். உச்ச புதனின் ஆதிக்கத்தால் மாமன், மைத்துனர் வழியில் எதிர்பார்த்தபடியே ஒத்துழைப்பு கிடைக்கும். நீச்ச பங்க ராஜயோக அடிப்படையயில் சூரியனும், சுக்ரனும் இருப்பதால் ஆரோக்கியப் பாதிப்புகள் சனியின் அஸ்தமன காலத்தில் ஏற்பட்டாலும் மாற்று மருத்துவத்தால் உடனுக்குடன் உடல்நலம் சீராகும்.

பொதுவாக மாதம் தொடங்கிய மூன்று நாட்களிலேயே சனி பலமிழந்து சஞ்சரிக்கிறார். எனவே எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து எடுக்கும் முடிவில்கூடச் சிக்கல்கள் ஏற்படலாம். மேலும் ராசிநாதன் பலமிழந்து சஞ்சரிக்கும் பொழுது குடும்பப் பெரியவர்களைக் கலந்து ஆலோசித்து எதையும் முடிவெடுப்பது நல்லது. உறவினர் பகை உருவாகும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அஷ்டமத்து ராகுவால் அடிக்கடி வீழ்ச்சியும், எழுச்சியும் மாறிமாறி வரும் என்பதால் அதற்குரிய சர்ப்ப சாந்திப்பரிகாரங்களை முறையாக யோகபலம் பெற்ற நாளில் செய்தால் யோக வாய்ப்புகள் வந்து சேரும். வார வழிபாடாக சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வாருங்கள். தெசா புத்திக்கு ஏற்ப தெய்வ வழிபாடும் உங்களுக்கு தித்திக்கும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகும் சுக்ரன்!**

அக்டோபர் 20 ஆம் தகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மை தான். 4.9 இற்கு அதிபதியான சுக்ரன் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது பொன், பொருள் சேரும். பொருளாதார நிலை உயரும். அன்பு நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். வம்பு, வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். ராசி நாதனோடு சுக்ரன் இணையும் பொழுது பெற்றோர் வழியில் பிரியம் கூடும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். அதே நேரத்தில் சனியும் வலிமை இழப்பதால் அருகிலருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 2 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலத்தில் பிள்ளைகளின் வேலை வாய்ப்புக் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். உதிரி வருமானங்களும் பெருகும். பூர்வீக சொத்துக்களிலிருந்த பிரச்சினைகள் பஞ்சாயத்துக்களில் நல்ல முடிவிற்கு வரும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**


இக்காலம் ஒரு பொற்காலமாகும். 4, 9 இறகு அதிபதியான சுக்ரன் 10 இல் சஞ்சரித்து பலவித நன்மைகளை உங்களுக்கு வழங்கப் போகிறார். திறமை வெளிப்படும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். வாயில் தேடி வரவு வந்து சேரும். வருமானப் பற்றாக்குறை அகலும். கோவில் திருப்பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவான்வழிபாட்டையும், வியாழன்தோறும் குரு பகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும். அடிக்கடி வீண் விரயங்கள் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து செயற்படுவர். மாற்றங்கள் மனதிற்குப் பிடித்த விதத்தில் அமையும். மக்கள் செல்வங்களால் நன்மை கிடைக்கும். இம்மாதம் சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

## வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வரும் என்றே சொல்ல வேண்டும்!

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**தகவல் வீடு வந்து சேரும் நேரம்! மற்றவர்களுடன் எளிதில் பழகி, இதயத்தில் இடம் பிடிக்கும் மீன இராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமத்துச் சனி வலிமை இழந்து சஞ்சரிக்கும் சூழ்நிலை உருவாகிறது. "அகப்பட்டவருக்கு அஷ்டமத்தில் சனி" என்பது பழமொழி. ஆனால் அந்தச் சனி விலகும் பொழுதோ, வலிமை இழக்கும் பொழுதோ ஒன்றுக்கு இரண்டு மடங்காகப் பலன்களை கொடுக்கும். உற்சாகம் இழந்த வாழ்க்கையை உயிரோட்டமான வாழ்க்கையாக மாற்றிக் காட்டும். பொருளாதாரத்தை மேம்படுத்தும், பொல்லாதவர்களை விலக வைக்கும்.

இம்மாதத்தில் உச்சம் பெற்ற குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் துயரங்கள் தூளாகும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். நீண்ட தூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். மண விழா, ம்ணி விழா மற்றும் எதிர்பார்த்த விழாக்களெல்லாம் இல்லத்தில் நடைபெறுவதிலிருந்த தடைகள் அகலும். வாகனப் பழுதுச் செலவுகளால் வருத்தத்திற்கு ஆளானவர்கள் தேக நலன் கருதியும், சிரமமின்றி செல்லவும், நூதன வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவர்.

சப்தம ஸ்தானத்தில் சுக்ரன் நீச்சம் பெற்று உச்சம் பெற்ற புதனோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினைகள் அகலும். வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டு அனுகூலம் ஒரு சிலருக்கு உண்டு. மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக் கசப்புகள் மாறும். இடம், பூமியால் லாபம் கிடைக்கும்.

நீண்ட நாளைக்கு முன்பாக வாங்கிப் போட்ட இடம் விற்கவும் முடியவில்லை, வீடு கட்டவும் முடியவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள் இப்பொழுது அதற்கான ஒரு நல்ல முடிவை எடுத்து செயற்படுத்துவர். குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தில் யாருடைய ஜாதகத்தில், பூமிகாரகன் செவ்வாய் வலுப்பெற்றிருக்கிறதோ, அவர்கள் பெயரில் வீடு கட்டினால் தங்கு தடையின்றி வளர்ச்சியடையும்.

ஜென்ம ராசியில் கேது சஞ்சரிப்பதால் திங்கட்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. திசைமாறிய விநாயகப் பெருமான் வழிபாடு உங்களுக்கு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். அதுமட்டுமல்ல, பிரதோஷத்தன்று நந்தியெம்பெருமானை வழிபடுவதன் மூலமும் நலன்களையும், வரங்களையும் வரவழைத்துக் கொள்ள முடியும்.

**அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சுக்ரன்!**

உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாக சுக்ரன் அக்டோபர் 20 ஆம் திகதி துலா சொந்த வீடான துலாத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, சில இழப்புகளையும், விரயங்களையும் சந்திக்க நேரிடும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனி வலிமை இழக்கிறார். எனவே அடமானம் வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். அடுத்தவரிடம் கொடுத்து வராதிருந்த தொகை கைக்கு வந்து சேரும். குடும்பச் செலவுகள் கூடுதலாகவே இருக்கலாம். பணியில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 2 ஆம் திகதி துலாம் ராசியில் புதன சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களிலிருந்த பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வர். வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் தாய்நாடு திரும்பும் சூழ்நிலை உருவாகும். பங்காளிப் பகை உருவாகும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 13ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். தன்வீட்டைத் தானே பார்க்கப் போகிறார். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். ஊர் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரும். பழைய வீட்டையும் புதுப்பிக்கும் பணியும் ஒரு சிலருக்கு உருவாகலாம். தொழில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். இம்மாதம் குரு தட்சிணா [illegible] வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்:**

இம்மாதம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் மாதமாகும். குடும்பப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக முடிவிற்கு வரும். சனி கொஞ்சம் வலிமை இழக்கும் நேரம் என்பதால் சண்டை போட்டவர்கள் சமாதானக் கொடி பிடிப்பர். உறவினர் பகை மாறும். இடமாற்றம், வீடு மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.


கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே இடம், வீடு வாங்க முன்வருவர். ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கை அமைய சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது.

(முற்றும்)

## நல்ல தகவல்கள் வீடு வந்து சேரும் இக்காலம் இனிய காலமாகும்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்கொட்லாந்து-நியூசிலாந்து-ஹாங்காங் போர்க்கொடி



கிரேட் பிரிட்டன் என அழைக்கப்படும் பிரிட்டிஷ் நாட்டில் ஸ்கொட்லாந்து, வடக்கு அயர்லாந்து, வேல்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நான்கு பகுதிகள் உள்ளன. பிரிட்டனுடன் ஸ்கொட்லாந்து இணைந்து 307 ஆண்டுகள்தான் ஆகிறது.

கி.பி. 1603இற்கு முன்னர் ஸ்கொட்லாந்து தனிநாடாக விளங்கி வந்தது. அதற்கென தனியான மன்னர் பரம்பரை ஆண்டு வந்தது. ஸ்கொட்லாந்திற்கும், இங்கிலாந்திற்கும் இடையே பல தடவைகள் போர்கள் நடைபெற்று இருக்கின்றன. இரு நாடுகளுக்கிடையேயும் தீராத பகை எப்போதும் இருந்து வந்தது.

ஆனால், 1603 ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னர் ஸ்கொட்லாந்தின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அதை தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

1707ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் ஏற்பட்ட உடன்படிக்கையின் கீழ் ஸ்கொட்லாந்து அரசுக்கு சட்டம், கல்வி, மத அமைப்பு நிர்வாகம் ஆகிய துறைகளில் சுதந்திரம் அளிக்கப்பட்டது. 300 ஆண்டு காலமாக இந்த ஏற்பாடு நிலவியது.

பிரிட்டனின் பிற பகுதிகளைவிட ஸ்கொட்லாந்து பலவிதங்களிலும் புறக்கணிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கருதினர். குறிப்பாக தங்கள் நாட்டின் பெட்ரோல் வளத்தை பிற பகுதியினர் சுரண்டிவருவதாக குற்றம் சாட்டினர்.

பிரிட்டனின் மக்கள் தொகையில் 8% உள்ள ஸ்கொட்லாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 235 மில்லியன் டொலர்களாகும். மேலும் பிரிட்டனின் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஏராளமான ஏவுகணைகளும், அவற்றைத் தாங்கி நிற்கும் 4 அணு சக்தி நீர்மூழ்கி கப்பல்களும் ஸ்கொட்லாந்து கடல் பகுதியில்தான் இருக்கின்றன. ஸ்கொட்லாந்து தனி நாடானால் இந்த ஏவுகணைகளும், அணு சக்தி நீழ்மூழ்கிக் கப்பல்களும் அகற்றப்படும் என முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் தெரிவித்திருந்தார்.

"இங்கிலாந்தின் பிற துறைமுகங்களில் இத்தனை ஏவுகணைகளையும் நீர்மூழ்கி கப்பல்களையும் நிறுத்தும் வசதி இல்லாததால் ஸ்கொட்லாந்து பிரிந்தால் பிரிட்டனின் தன்னிச்சையான அணு ஆயுத வல்லமையே கேள்விக்குரியதாகிவிடும்.

மேலும் ஸ்கொட்லாந்து தனிநாடானால் ஐ.நா.வின். நிரந்தர உறுப்பு நாடுகளுள் ஒன்றாக பிரிட்டன் இருப்பது சாத்தியமற்றதாகிவிடும" என பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ஜான் மேஜர் எச்சரித்திருந்தார்.

7 நாடுகள் கூட்டமைப்பிலிருந்து அதன் இடத்தை இழக்க நேர்ந்திருக்கும். உலகின் 6வது பெரிய பொருளாதார நாடான பிரிட்டன் ஸ்கொட்லாந்து இல்லாமல் அந்த இடத்தை பிரேசிலிடம் பறிகொடுக்க வேண்டியிருக்கும் என்பது போன்ற சர்வதேச நெருக்கடிகளும் உருவாகியிருக்கும்.

1997 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பை அடுத்து அங்கு மீண்டும் தனி நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அங்கு நடைபெற்ற தேர்தலில் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து பிரிட்டனிலிருந்து முற்றிலுமாக விலகி சுதந்திரம் பெற்ற தனிநாடாக ஸ்கொட்லாந்து விளங்க வேண்டுமா? என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இது குறித்து இரண்டரை ஆண்டு காலத்திற்கு மேல் இரு தரப்பும் மிகக் கடுமையான பிரசாரப் போரில் ஈடுபட்டன. "பிரிந்தே ஆக வேண்டும்" என்பவர்களும், "பிரிய வேண்டாம" என்பவர்களும் நடத்திய பிரசாரத்தில் அனல் பறந்தது.

ஸ்கொட்லாந்து பிரிந்து போனால் அதைத் தொடர்ந்து வேல்ஸ் பகுதியும் பிரிந்து போகும் என பிரிட்டன் அஞ்சியது. ஏற்கெனவே வட அயர்லாந்து பகுதியின்மீது அயர்லாந்து உரிமை கொண்டாடி வருகிறது. இப்பகுதிகள் பிரிட்டனிலிருந்து பிரிந்து சென்றுவிடுமானால் இங்கிலாந்து "உலக வல்லரசு" என்ற நிலையை இழந்துவிடும்.

எனவே பிரிட்டிஷ் பிரதமர் டேவிட கெமரூன் ஸ்கொட்லாந்திற்கு நேரடியாகச் சென்று அம்மக்களிடம் பேசியபோது "பிரிட்டனின் பகுதியாக ஸ்கொட்லாந்து தொடரவேண்டும் என எங்களின் இதயங்கள் கூறுகின்றன. பிரிவினை என்பது மிகுந்த வேதனையை அளிக்கும். ஸ்கொட்லாந்து பகுதியினரின் ஓய்வு ஊதியம் முதல், கரன்சி வரை ஏராளமான பொருளாதார விடயங்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும். நமது இராணுவம் துண்டாடப்படும். இரு நாடுகளுக்கிடையே உருவாகும் புதிய எல்லைக்கோட்டை, மக்கள் கடப்பது எளிதல்ல என்ற நிலை உருவாகும்" என வேண்டிக் கொணடார்.

பிரிட்டனின் அரசியலில் ஒருபோதும் தலையிடாத பிரிட்டிஷ் அரசி எலசபெத் "பிரிட்டனிலிருந்து ஸ்கொட்லாந்து தனிநாடாக செயற்படுவது தொடர்பான வாக்கெடுப்பின் போது தங்களின் எதிர்காலம் குறித்து நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என ஸ்கொட்லாந்து மக்களை வேணடிக் கொள்கிறேன" என கடைசி நேரத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

18-09-14 அன்று ஸ்கொட்லாந்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது. 86% மக்களே வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். 14% மக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வாக்களித்தவர்களில் 55% மக்கள் பிரிவினைக்கு எதிராகவும் 45% மக்கள் பிரிவினைக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.

ஆனாலும் வாக்களிக்காத 14% மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக எதிர்காலத்தில் மாறக்கூடும். அப்படியானால் மறுபடியும் பிரிவினைக் கோரிக்கை கிளர்ந்து எழும். இதை உணர்ந்த பிரதமர் கேமரூன் ஸ்கொடலாந்திற்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க வகை செய்யும் சட்டத்திருத்தங்களை கொண்டுவர முடிவு செய்துள்ளார்.

ஸகொட்லாந்து முதலமைச்சரும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் தலைவருமான அலெக்ஸ் சால்மண்ட் வாக்கெடுப்பிற்குப் பிறகு தனது பதவியிலிருந்து விலகினார். அதைத் தெடெர்ந்து அவர் "இந்த வாக்கெடுப்புடன் ஸ்கொட்லாந்து தனி நாடாக பிரிவதற்கான இயக்கம் முடிவடைந்துவிடவில்லை. அந்தக் கனவு எப்போதும் அழிவதில்லை. ஸ்கொட்லாந்திற்கான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் நிர்பந்தத்தில் பிரிட்டன் உள்ளது. வாக்கெடுப்பில் நாங்கள் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால், எங்கள் அரசியல் நோக்கங்களை அடையும் முயற்சிகளை கைவிடவில்லை. ஸ்கொட்லாந்து தனி நாடாக உருவாவதற்கான வாய்ப்புகள் இன்னமும் உள்ளன" என்று கூறினார்.

## நியூசிலாந்து விடுதலைக் குரல்

பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் ஒன்றான நியூசிலாந்து, ஸ்கொட்லாந்து வழியில் நடைபோடத் துவங்கியுள்ளது.

பிரிட்டனின் ஆதிக்கத்தில் கடந்த 122 ஆண்டுகளாக இருந்து வரும் நியூசிலாந்து நாட்டின் தேசிய கொடியின் ஒரு பகுதியில் பிரிட்டனின் யூனியன் ஜாக் கொடி பதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகும் பிரிட்டனின் குடியேற்ற நாடாகத்தான் நியூசிலாந்து விளங்குகிறது என்ற தோற்றத்தை அந்நாட்டின் தேசியக் கொடி பிரதிபலிக்கிறது என மக்கள் கருதினர்.

பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் ஒன்றான கனடா தனது கொடியில் இருந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் அடையாளத்தை அகற்றிவிட்டு புதிய கொடியை மாற்றி வடிவமைத்துள்ளது. அதைப் போல தாங்களும் செய்ய வேண்டும் என விரும்புகின்றனர்.

அண்மையில் நியூசிலாந்தில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று பதவியில் அமர்ந்த பிரதமர் ஜான் கீ "நம் நாட்டுக் கொடியில் இடம்பெற்றுள்ள பிரிட்டிஷ் யூனியன் ஜாக் அடையாளம் தொடரவேண்டுமா என்ற விடயத்தில் மக்களின் கருத்தை அறிய வாக்கெடுப்பு நடத்தப்படும்" என அறிவித்துள்ளார்.

45 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நியூசிலாந்து ஒரு கருத்து வாக்கெடுப்பிற்குத் தயாராகிக் கொணடிருக்கிறது.

## ஹாங்காங் கொடி உயர்த்துகிறது

155 ஆண்டு காலத்திற்கு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த ஹாங்காங் தீவை 1984 ஆம் ஆண்டு செஞ்சீனத்திடம் பிரிட்டன் ஒப்படைத்தது. 1997ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. ஹாங்காங், மஹாவ் என்னும் இரு பகுதிகளும் சுயேச்சை அதிகாரங்களுடன் சீனத்துடன் இணைக்கப்பட்டன. இராணுவம், வெளியுறவு ஆகிய இரு துறைகள் மட்டுமே சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். இதர துறைகள் சிறப்பு நிர்வாகப் பகுதியின் ஆட்சியின் கீழ் வரும் என உறுதியளிக்கப்பட்டது.

ஹாங்காங்கில் அரசியல் உரிமையில் தலையிடமாட்டோம் என கூறியிருந்தது சீன கம்யூனிஸ்ட் கட்சி. கடந்த ஜூலை மாதம் சீன அரசு வெளியிட்ட வெள்ளையறிக்கை ஒன்றில் ஹாங்காங்கின் சிறப்பு அதிகார குழுவிற்கு உள்ள அதிகாரங்கள் அனைத்தும் தங்களால் அளிக்கப்படுவது என்றும், 2017ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வேட்புமனு தாக்கலுக்கு முன்னதாகவே வேட்பாளர்கள் பற்றிய தகவலை தங்களிடம் தரவேண்டும் என்றும், தங்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே வேட்பாளர்களாக ஆகவேண்டும் என்றும் திட்டவட்டமாக கூறியது. இதற்கு ஹாங்காங் மக்கள் நடுவே கடும் எதிர்ப்பு எழுந்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கைக் கண்டித்து நகரின் மையப் பகுதியில் வண்ண வண்ண குடைகளின் கீழ் திரண்டு "அரசியல் சுதந்திரத்தில் கை வைக்கக்கூடாது" மக்கள் முழக்கமிடுகின்றனர்.

ஹாங்காங் மக்கள் வெறும் அரசியல் உரிமைகளுக்காக மட்டும் போராடவில்லை. தங்களுடைய தனித்துவமான கலாச்சாரம், கல்வி, வணிகம், தொழில் உரிமைகள் போன்றவற்றிற்காகவும் போராடுகின்றனர். கான்டன் மொழி பேசும் ஹாங்காங் இளைஞர்கள் சீன ஆதிக்கத்தின் கீழ் வந்ததும் மன்டாரின் மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும் என வற்புறுத்தபட்டனர். ஹாங்காங்கின் செல்வவளம், கலாச்சார தனித்தன்மை, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவற்றிற்காக ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான சீனர்கள், சீனாவின் பிற மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். ஹாங்காங்கில் வழங்கப்படும் அரசியல் உரிமைகள் தங்களுக்கும் வழங்கப்படவேண்டும் என பிற மாநிலங்களிலும் போராட்டங்கள் வெடிக்கக்கூடும் என சீன அரசு அஞ்சுகிறது. ஹாங்காங்கின் ஜனநாயக உரிமைகளில் கைவைக்கத் தொடங்கியிருக்கிறது.

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பாராளுமன்றத்தை

# கவிழ்ப்போம்

## ஐ.தே.க.எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பிற்கு முன்பு அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பாராளுமன்றத்தை கவிழ்ப்போம் என ஐ.தே.க. உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தற்போதிலிருந்தே தேர்தல் விதிமுறைகள் மீறப்படுகின்றன. இதற்கமைய தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் சோதிடருக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர் விருப்பின் படியே தேர்தல் நடத்தப்படவுள்ளது என்றும் குற்றம் சுமத்தினார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலை ஜனவரி 9 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திகதியானது ஜனாதிபதியின் சோதிடரின் முடிவாகும்.

இதற்கமைய ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகளில் அரசாங்கம் மும்முரமாக செயற்பட்டு வருகின்றது. இதன்படியே துறைமுக அதிகாரசபையின் பயிற்சி நிலையத்தில் ஆளும்கட்சிக்கு சார்பான பதாகைகள், மேடைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இது அரசாங்கத்திற்கு சொந்தமான இடமாகும். இதனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு குத்தகைக்கு விட்டதாக குறிப்பிடுகின்றன. எனவே, ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து தற்போதே சட்ட விதிமுறைகள் மீறப்படுகின்றன.

இதேவேளை, தேர்தல் ஆணையாளர் மீதான அதிகாரங்கள் ஜனாதிபதி சோதிடருக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் செயலகத்தின் மீதான உரிமைகளை ஜனாதிபதி செயலகம் பறித்துள்ளது.

அத்தோடு தற்போது தேர்தலின் மாற்றம் ஏற்படுத்தும் நோக்குடன் பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாக முன்பு பாராளுமன்றத்தை கவிழ்த்து மக்களின் துயரத்தை முடிவுகக்கு கொண்டு வருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)

## விஷ்ணு கோவிலில் பலசேனாவின் பௌத்த துறவிகள் வழிபாடு



(கொழும்பு)

பொதுபலசேனாவின் பௌத்த குருமார் தீபாவளித்தினமான நேற்று முன்தினம் புதன்கிழமை காலை தெஹிவளை விஷ்ணு கோவிலுக்கு சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்து - பௌத்தர்களிடையே ஒற்றுமை மாதத்தை பொதுபலசேனாவும் இந்து சம்மேளனமும் தீபாவளித் தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு பிரகடனப்படுத்திய நிலையிலேயே இந்துக் கோவிலில் பௌத்த குருமார் கலந்துகொண்ட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

தீபாவளித்தினமான நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு பொதுபல சேனாவின் தலைவர் கிரம விமல ஜோதி தேரரின் பௌத்த மத்திய நிலையம் அமைந்துள்ள தெஹிவளையில் இதன் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

விஹாரையில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் உட்பட மேலும் பல தேரர்களும் இந்து சம்மேளனத்தின் பிரமுகர்களும் பௌத்த மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டனர்.

பின்னர் கலந்து கொண்டவர்களுக்கு பாற்சோறு, சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டு கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இதன்போது, இந்துக்கள் - பௌத்தர்கள் பணம், சலுகைகள் வழங்கி மூளைச் சலவை செய்யப்பட்டு கிறிஸ்தவ, முஸ்லிம் அடிப்படைவாதிகள் மதமாற்றம் செய்யப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, இந்து சம்மேளனத்தின் ஊடகச் செயலாளர் ராஜ் பாஸ்கரன் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இந்துக்களும் பௌத்தர்களுக்குமென 10 ஏக்கர் நிலப்பரப்பில் மயானங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற யோசனையை முன்வைத்தார். இதன் பின்னர் கிரம விமல ஜோதி தேரர், விதாரன்தெனியே தத்த தேரர் உட்பட பௌத்த குருமாரும் டிலந்த விதானகே மற்றும் முக்கியஸ்தர்களும் பூஜை தட்டுகளை சுமந்த வண்ணம தெஹிவளை விஷ்ணு கோவிலுக்கு இந்து சம்மேளனத்தினருடன் வருகை தந்தனர்.

பௌத்த குருமாரை வரவேற்ற கோவில் பிரதம பூசகர் கருவறைக்குள் அழைத்து சென்று விசேட பூஜை வழிபாடுகளை நடத்தினார்.

பின்னர் வெளியே வந்ததும் பௌத்த குருமாருக்கு காலாஞ்சி வழங்கப்பட்டது. அங்கு கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட சிறுமியர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் தீபாவளி தினமென்பதால் விஷ்ணு கோவிலில் பெருமளவான இந்துக்கள் கூடியிருந்ததோடு பௌத்த குருமாரை கோவிலில் கண்டு ஆச்சரியமடைந்தவர்களாக காணப்பட்டனர். (இ)

## மகிந்தவுக்குத் தொடர்ந்தும் ஆதரவா?

### சமசமாஜக் கட்சி இன்று முடிவு

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதா என்பது குறித்து இன்று கலந்தாலோசிக்கவுள்ளதாக சமசமாஜக் கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது குறித்து ஆராய்வது இன்றைய கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார முறையை இரத்துச் செய்யுமாறு தனது கட்சி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்தும் ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்ற போதிலும், ஜனாதிபதி அது தொடர்பில் கரிசனை காட்டவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவளிப்பதற்கும், ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதற்கும் சமசமாஜக் கட்சி சில நிபந்தனைகளை முன்வைக்கும்என்றுகூறப்படுகிறது.

17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்து சுயாதீன ஆணைக்குழுக்களை மீள உருவாக்கல், தேர்தல் முறையில் மாற்றம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிபதவியை இரத்துச்செய்தல் என்பன அந்த நிபந்தனைகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-5)

## இன்று ஒரு தகவல்

### கல்லறையை நோக்கி...

ஒருவருடைய உண்மையான குணம் அவர் இந்த உலகத்தை விட்டுப் போகும் சமயத்தில் தான் தெரியுமாம். ஓஷோ என்ற பெரியவர் இதைப்பற்றி ஒரு கதை சொல்லியிருக்கிறார் பார்ப்போம்.

வசதியான ஆள் ஒருவன் இருந்தான். இருந்தாலும் அவன் அந்த வசதியை அனுபவிக்கத் தெரியாதவனாகவே இருந்தான். ஒரு நாள் அவன் சாகக் கிடந்தான். சொந்த பந்த மெல்லாம் கூடி நின்றார்கள்.

பிள்ளைகளெல்லாம் அப்பா இறந்த பின் அவரை எப்படி கல்லறைக்குக் கொண்டு போவது என்பதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். மூத்த பிள்ளை " அப்பா இறந்தபின் அவரைக் கல்லறைக்குள் கொண்டு போவதற்கு வாடகைக்கார் ஒன்றை எடுக்கலாம் " என்றான்.

அடுத்த பிள்ளை அவர் ஒரு விலையுயர்ந்த காரில் போக வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார் ஆனால் வாழ்க்கையில் ஒருநாள் கூட அது நடக்கவில்லை. கடைசியில் கல்லறைக்குப் போகும் சமயத்திலாவது அவர் அதில் போய்ப் பார்க்கட்டும் என்றான்.

இதைக்கேட்ட பெரியவன், விபரம் தெரியாமல் பேசாதே... உனக்கு ஒன்றும் தெரியாது. இறந்தபின் எதையும் அனுபவிக்க முடியாது. எந்தக்காராக இருந்தால் என்ன? அது உயர்ந்ததா, மட்டமானதா என்று அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? விலையுயர்ந்த கார் வேண்டாம் என்றான்.

இதைக்கேட்டதும் இன்னொரு பிள்ளை சொன்னான். " நீங்கள் இருவரும் பேசுவது கொஞ்சம் கூட அர்த்தமில்லாத விடயம். கல்லறைக்கு உடம்பை எடுத்துக்கொண்டு போவதற்கு கார் எதற்கு?

எனக்கு வேண்டிய ஒருத்தன் சவ வண்டி ஒன்று வைத்திருக்கிறான். அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அது சிக்கனமாகவும் வசதியாகவும் இருக்கும் என்றான்.

இதைக்கேட்ட இன்னொரு மகன், காரும் வண்டியும் எதற்கு? அவர் என்ன கல்யாணமா செய்து கொள்ளப் போகிறார்? இறந்தவுடன் அவரைத் தூக்கிக் கொண்டு போய் நம் வீட்டுக்கு வெளியேயுள்ள குப்பைத் தொட்டியில் போட்டுவிடலாம். முனிசிபாலிட்டி வண்டி தானாகவே அவரைத் தூக்கிக்கொண்டு போய் விடும். நமக்குச் செலவே இல்லை! என்றான்.

இந்த நேரத்தில் சாகக்கிடந்தவர் மெதுவாகக் கண்ணைத் திறந்து... "எங்கே என் செருப்பு?" என்றான். செருப்பை எடுத்துக் கொடுத்தார்கள் அவர் அதை வாங்கி தட்டுத்தடுமாறி எழுந்து நின்று பிள்ளைகளைப் பார்த்து,

"பிள்ளைகளே... நான் இன்னும் கொஞ்ச நேரம் தான் உயிருடன் இருப்பேன். அதற்குள் கல்லறைக்கு கால்நடையாக நடந்தே போய்விடுகிறேன். உங்களை அங்கே சந்திக்கிறேன். நீங்கள் ஊதாரித்தனமாக செலவு செய்யத்திட்டம் போடுகிறீர்கள்.

நான் காரில் போகவேண்டும் என்று கனவுதான் கண்டேன். ஏனென்றால் கனவு செலவில்லாதது. அதனால் தான் கண்டேன் என்று சொல்லிவிட்டு அவர் பாட்டுக்கு நடந்து போய் கல்லறையில் உட்கார்ந்துவிட்டார். ஒருவன் எப்படிப்பட்டவன் என்பது சாகும் சமயத்தில் தான் தெரியும் என்பதை விளக்குவதற்காக சொல்லப்பட்ட கதை இது.

இந்தக்காலத்து ஆள் ஒருவன் சாகக் கிடந்தான். சுற்றிவர சொந்தபந்தமெல்லாம் உட்கார்ந்திருந்தார்கள். கடைசியாக டாக்டர் வந்து கையைப் பிடித்துப் பார்த்து " இறந்துவிட்டான்" என்று சொன்னார். அவனை பாடையில் வைத்து தூக்கிக் கொண்டு போனார்கள். பாடையில் இருந்தவன் பாதி வழியில் எழுந்து உட்கார்ந்து கொண்டு "நான் இன்னும் சாகவில்லை உயிர் இருக்கிறது" என்று மெதுவாக சொல்கிறான்.

தூக்கிக் கொண்டு போன நான்கு பேரில் ஒருவன் " நீ செத்துப் போய்விட்டதாக டாக்டரே சொல்லிவிட்டார்.... அவரை விட நீ என்ன விடயம் தெரிந்தவரா? பேசாமல் படு என்று சொல்லி விட்டு? எல்லோரும் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் லாக்கரிலிருந்து 4 குழந்தைகளின் சடலம் மீட்பு

கனடா நாட்டில் உள்ள ஒட்டாவா பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்று பொது மக்களுக்கு லாக்கர் வசதிகளை கட்டண அடிப் படையில் செய்து கொடுத்துள்ளது.

இதில் ஒரு லாக்கரை வாடகைக்கு எடுத்திருந்த நபர் அதற்குள் பல மாதங்களுக்கு முன் இறந்த 4 குழந்தைகளின் சடலத்தை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி அந்த நிறுவனம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளது.

அவர்கள் லாக்கரில் இருந்த 4 குழந்தைகளின் சடலத்தையும் கைப்பற்றினார்கள். அந்த குழந் தைகள் 4 பேரும் ஒரு மாதத்தில் இருந்து 6 மாதத்திற்குட்பட்ட வயதுடையவர்கள்.

இதைத்தொடர்ந்து லாக்கரை வாடகைக்கு எடுத்திருந்தவரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகிறார்கள். அவர் யார்? அந்த குழந்தைகள் சடலத்தை எப்படி அங்கு கொணடு வந்தார்? அது யாருடைய குழந்தைகள் போன்ற விபரங்கள் எதையும் பொலிஸார் வெளியிடவில்லை. இது பற்றி தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. (இ)

# ஒபாமா தீபாவளி வாழ்த்து

உலகம் முழுவதும் தீபாவளி கொண்டாடும் மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தீபாவளி பண்டிகை நேற்று முன் தினம் (புதன்கிழமை) கொண்டாடப்பட்டது. காஷ்மீர் உள்ளிட்ட வட மாநிலங்களில் தீபாவளி நேற்று (வியாழக்கிழமை) கொண்டாடப்பட்டது.

உலகம் முழுவதும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபாவளி திருநாளை கொண்டாடும், உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள், ஜெயின்கள், சீக்கியர்கள் மற்றும் புத்த மதத்தினருக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் தீபாவளி திருநாளை கொண்டாடும் மக்களுக்கு எனது வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்று ஒபாமா வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவி ஏற்ற காலம் தொடங்கி இந்தியா மீதும், இந்தியர்கள்மீதும் நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். அவர் இரண்டாவது முறையாக பதவி ஏற்ற பின்னர் முக்கிய பதவிகளில் இந்தியர்களை அமர்த்தி வருவதே அதன் வெளிப்பாடுதான். 2009 ஆம்ஆண்டு வெளைமாளிகையில் நடைபெற்ற தபாவளி கொண்டாட்டங்களல் ஒபாமா கலந்து கொண்டு சிறப்பு செய்ததை மறந்து விட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)



நேபாளத்தில் இந்துக்களால் கொண்டாடப்படும் 5 நாட்கள் கொண்ட திகார் திருவிழாவில் நேற்றுமுன்தினம் நாய்களுக்குரிய விசேட திருவிழா நேபாள- மத்திய பொலிஸ் நிலையத்தின் நாய்களுக்குரிய பயிற்சிப் பள்ளியில் கொண்டாடப்பட்டது.

# பட்டாசு கடையில் திடீரென விபத்து

## 7 பேர் பலி

இந்தியாவின் ராஜஸ் தான் மாநிலம் பார்மெர் மாவட்டத்தில் பட்டாசு கடை தீ பிடித்து எரிந்ததில் உரிமையாளர் உட்பட 7 பேர் பலியாகினர்.

வட மாநிலங்களில் தீபாவளி நேற்று (வியாழக்கிழமை) கொண்டாடப்பட்டது. ராஜஸ்தானில் பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் பலியாகினர். பாலோதாரா டவுனில் இருந்த பட்டாசு கடையில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு பட்டாசு கடையில் விற்பனை நடைபெற்ற போது, கடையின் அருகே சிறுவர்கள் பட்டாசு வெடித்துள்ளனர். அப்போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சிறுவர்கள் பட்டாசு வெடித்த போது கடையில் இருந்த பட்டாசுகளை பாதுகாக்க கடையின் ஊழியர் ஒருவர் கடை யின சட்டரை அடைத்துள்ளார். ஆனால் 1.20 மணிய ளவில் மொத்த கடையும் தீக்கிரையாகியது. மீட்பு படையினர் வநது தீயை அணைததனர். பட்டாசுகள் வெடித்து சிதறியது.

இந்த சம்பவத்தில் கடையின் உரிமையாளர், அவரது மகன் இருவர் உட்பட 7 பேர் பலியாகினர். பட்டாசு வாங்க வந்தவர்களும் இந்த விபத்தில் சிக்கிக் கொண் டனர். பிரேத பரிசோதனைக்கு அடுத்து இறந்தவர்களின் உடல் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(இ-3-5)

# கறுப்புப் பணப் பட்டியல் வெளியாகும் போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தலைகுனிவார்கள்-ஜேட்லி

சுவிட்சர்லாந்து வங்கிகளில் கறுப்புப் பணத்தை பதுக்கியுள்ளோரின் பெயர்ப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும், அப்போது காங்கிரஸ் தலைகுனிய நேரிடும் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார். இது குறித்து தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

கறுப்புப் பண பட்டியலை வெளியிடாதது ஏன் என்று காங்கிரஸ் தலைவர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். அந்தப் பட்டியல் விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அதன்மூலம் பொதுமக்களுக்கும் பட்டியலில் உள்ளவர்களின் பெயர்கள் தெரியவரும். பா.ஜ.கவை பொறுத்தவரை எங்கள் தலைவர்கள் யாரும் சுவிஸ் வங்கியில் கறுப்புப் பணத்தை முதலீடு செய்யவில்லை. ஆனால் மக்கள் மன்றத்தில் பட்டியல் வெளியாகும் போது அதில் உள்ள சில பெயர்கள் காங்கிரஸ் கட்சிக்கு தலைகுனிவை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் தெரிவித்தார். (இ-3-5)

# எபோலா தடுப்பு நடவடிக்கை; ஜெனீவாவில் அவசரக்கூட்டம்


பரவிவரும் எபோலா நோயைக் கட்டுப்படுத்த நடந்துவரும் முயற்சிகளை மதிப்பிடும் நோக்கில் உலக சுகாதார கழகம் ஜெனீவாவில் அவசர கூட்டம் ஒன்றை இந்த வாரம் நடத்தவுள்ளது. விமான நிலையத்தில் பயணியின் உடல் வெப்பம் அளக்கப்படுவது போன்ற நோய்ப் பரவல் தடுப்பு பரிசோதனைகள் பல இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

எபோலாவினால் மிக மோசமான பாதிப்புகளை சந்தித் துள்ள நாடுகளான கினியா, சியாரா லியோன் மற்றும் லைபீரியாவில் நோய் தொடர்ந்தும் பரவி வருகிறது. நோய் பரவ ஆரம்பித்த நேரத்தில் உலக சுகாதார கழகம் மிகவும் மந்தமாக செயற்பட்டது என்ற குற்றச்சாட்டுகள் தெரிவிக்க ப்படுகின்றன.

விமான நிலையங்கள் போன்ற சர்வதேச பயண முனையங்களில் நோய்த் தொற்றுள்ளவர்களை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகள் பற்றியும், கடுமையான பயணக் கட்டுப் பாட்டு விதிகள் தேவையா என்பது பற்றியும் இக் கூட்டத்தல் பரிசீலிக்கப்படும். பரீட்சார்த்த ரீதியில் புதிதாக உற்பத்தி செயயப்பட்டுள்ள எபோலா தடுப்பு மருந்து ஒன்றின் முதல் தொகுதிகள் எதிர்வரும் புதன்கிழமை சுவிட்சர்லாந்தை வந்து அடையவுள்ளன.

ஆனால் முழுமையாக பரிசோதிக்கப்பட்டு, அனுமதி உரிமம் வழங்கப்பட்ட எபோலா தடுப்பு மருந்து பாவனைக்கு வர மாதக்கணக்கிலோ வருடக் கணக்கிலோ ஆகும் என்று தெரிகிறது. (இ-3-5)

# நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவிகளை விடுவிக்குமாறு போகோஹறாம் தீவிரவாதிகளுக்கு மலாலா வேண்டுகோள்




பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த சிறுமி மலாலாவுக்கு அமெரிக்கா தனது நாட்டின் உயரிய விருதான லிபர்டி விருதை வழங்கி கௌரவித்தது. கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் விருதுடன் அவருக்கு 61 இலட்ச ரூபாய் பணமும் வழங்கப்பட்டது.

விருதை பெற்றுக் கொண்ட மலாலா மேடையில் உரையாற்றும்போது, இந்த பணம் முழுவதையும் தான் பிறந்த நாடான பாகிஸ்தானில் உள்ள ஏழை சிறுவர் மற்றும் சிறுமியர்கள்கல்வி பயில செலவிட உள்ளதாக மலாலா கூறி யுள்ளார்.

மேலும் நைஜீரியாவில் கடந்த சில மாதங்களுக்கு முன் கடத்தப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட மாணவிகளை போகோஹறாம் தீவிரவாதிகள் விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். (இ-3-5)

# அமெரிக்க வாழ் இந்திய மாணவர்களுக்கு அமெரிக்காவின் இளம் விஞ்ஞானி விருது




அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இந்தியருக்கு அமெரிக்காவின் இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள மக்கள் மின்சாரத்தை சார்ந்துள்ள நிலையில், மின் பொருட்கள் உபயோகத்தால் ஏற்படும் காற்று தூய்மைக்கேட்டை கருத்தில் கொண்டு, சகீல் தோஷி என்ற இந்திய மாணவர் மின் பாதுகாப்பு சாதனத்தை கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார். அமெரிக்காவின் ஃபிட்ஸ்பர்க் பகுதியில் குடியேறியிருக்கும் அவருக்கு அமெரிக்காவின் உயரிய இளம் விஞ்ஞானி என்ற புத்தாக்க விருதையும் 25 ஆயிரம் அமெரிக்க டொலரையும் அமெரிக்காவின் டிஸ்கவரி எஜுகேஷன் என்ற அமைப்பு வழங்கி கௌரவித்துள்ளது. இந்த விருதுக்கான இறுதிச்சுற்றில் மொத்தம் 9 பேர் போட்டியிட்ட நிலையில், சகீல் தோஷி க்கு இந்த விருது வழங்கப்பட்டது.

மேலும், அமெரிக்காவின் வெர்ஜீ னியா பகுதியை சேர்ந்த இந்திய மாணவர் ஜெயகுமார் என்பவருக்கு காற்று தூய்மைக்கேட்டை தடுப்பதற்காக ஜன்னலில் பொருத்தப்படும் சிறப்பு கருவியை கண்டறிந்தார். இதற்காக அவர் 3ஆவது இடத்தை பெற்றுள்ளார். (இ-3-5)

# நாடாளுமன்ற தாக்குதல் தொடர்பில் அமெரிக்கா, இந்தியா கடும் கண்டனம்

## ஒபாமா, மோடி விடுத்தனர்

கனடாவில் நாடாளு மனற வளாகத்தில் புகுந்து தீவிரவாதிகள் நேற்று முன்தினம் முற்பகல் 9.52 மணியளவில் நடத்திய திடீர் துப்பாக்கிச்சூட்டு தாக்குதலில் ஒரு வீரர் உயிரிழந்தார். தலைநகர் ஒட்டாவாவில் நடைபெற்ற இச்சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் கடும் கண்டத்தை தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகே உள்ள போர் நினைவுச் சின்னம் மற்றும் ஒரு ஷொப்பிங் மால் ஆகியவை மீதும் இந்தத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர் என்று செய்தி தெரிவிக்கின்றது.

கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் உள்ள அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் அத்துமீறி நுழைந்த இருவர் திடீர் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், நாடாளுமன்ற வளாகத்தில் இருந்தவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றினர். பின்னர் அவர்கள் மர்ம நபர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர்.

**பிரதமர் மோடி**

கனடாவின் தலைநகரில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த இத்தாக்குதல் சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக இந்திய பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வேதனை தெரிவித்துள்ளார். அதில் அவர், "ஒட்டாவா தாக்குதல் சம்பவம் கடுமையான வேதனை அளிக்கிறது. அனைவரின் பாதுகாப்புக்காகவும் நான் பிரார்த்திக்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ஒபாமா கண்டனம்**

கனடா நாட்டின் நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்து மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் சம்பவத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டின் நாடாளுமன்ற வளாகத்திற்குள் மர்ம நபர்கள் நுழைந்து தாக்குதல் நடத்தியிருப்பது கண்டனத்திற்குரியது. தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்ளும் விதமாக கனடா நாட்டிற்கு துணை நிற்போம்" என தெரிவித்துள்ளார்.(இ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறப்படும் உரிமைகள்

**ஆபத்தான கரங்களில் சட்டம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் வெளிவந்த வருணி கருணாரத்ன எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது**

பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பியோடுவது அல்லது பொலிஸாருடன் ஏற்பட்ட நேரடி மோதல்கள் போன்ற நிலைமைகளில் சந்தேகநபர்கள் எதேச்சையாக சுட்டுக்கொல்லப்படுவது போன்ற சம்பவங்களில் தீவிரமானதொரு அதிகரிப்பு காணப்படுகிறது. இதுபோன்று இடம்பெற்ற பல சம்பவங்கள் பற்றிய நீண்டதொரு பட்டியலுண்டு. சந்தேகநபர்கள் கைவிலங்கிடப்பட்டிருந்த அதேநேரம் பொலிஸ் கண்காணிப்பிலிருக்கும்போதே குறிப்பான சில சம்பவங்களில் அவர்கள் தப்பியோடிருப்பதும் எப்படி என்பது போன்ற சந்தேகங்களும் பலராலும் எழுப்பப்பட்டிருக்கிறது.

எப்படியும் இவ்வாறான சம்பவங்கள் ஒழுங்காக இடம்பெறுவதாக இருக்கின்றபோதும் அவ்விதம் மீண்டும் ஏற்படாது தடுக்கும் விதத்தில் அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையெதனையும் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளாதது பற்றி பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபரொருவரை தண்டிப்பதற்கான உரி மயோ அதிகாரமோ எவருக்கும் கிடையாது; சந்தேகநபர் குற்றவாளியாக காணப்படுமிடத்து அவருக்கான தண்டனையை ஒரு சட்டநீதிமன்றம் மட்டுமே தீர்மானிக்கமுடியும் என இவ்விடயம் பற்றி சண்டேலீடர் பத்திரிகைக்கான தனது செவ்வியொன்றில் மனிதவுரிமைகள் சட்டத்தரணியாகிய டாக்டர் பிரதீபா மகாநாமஹேவா குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சந்தேகநபர்கள் எவரும் அவர் ஆணோ அல்லது பெண்ணோ சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றவாளியென தீர்க்கமான முறையில் நிரூபிக்கப்படும் வரையில் அவர் குற்றமற்றவராகவே கருதப்படுவார். 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசன 11ஆவது சரத்தின்கீழ் இலங்கையின் அனைத்து குடிமக்களில் எவரேனும் பொலிஸ் காவலில் இருப்பார்களாயினும் அதன்போது சித்திரவதைகள் மற்றும் மானபங்கமான தண்டனைகளுக்கு அவர்களை உட்படுத்த முடியாதளவிற்கு சுதந்திர உரிமை அவர்களுக்கும் உண்டு என அவர் மேலும் கூறுகிறார். கொடூரமான தண்டனைக்கான ஆணை வழங்கப்பட்டிருந்தாலுங்கூட உலகடங்கிலும் அவ்வித தண்டனைகள் சிறைக் கூடங்களில் நிறைவேற்றப்படுவதில்லை என அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

1980களில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தினை (ICCPR) இலங்கை ஏற்றுக் கொண்டு ஏற்கனவே கையெழுத்திட்டிருந்ததுடன் சித்திரவதைகள் மற்றும் ஏனைய குரூர மானபங்க நடத்துதல்கள் அல்லது மனிதாபிமானமற்ற தண்டனைகள் போன்றவற்றுக்கு எதிராக 1994 இல் உருவாக்கப்பட்ட சட்ட ஒப்பந்தத்தையும் அது ஏற்றுக் கொண்டுள்ளது என டாக்டர் மகாநாம தொடர்ந்தும் கூறுகிறார்.


அவருடைய கூற்றுப்படி சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரம் இருக்குமானால் அது சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே அதற்குப் பொறுப்பாளியாவார் என்பதுடன் நீதிமன்றத்தினால் அவரைத் தண்டிக்கவும் முடியும். பொலிஸ் அதிகாரிகளால் சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதாக காணப்படுமிடத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவருக்கு அவ்வதிகாரிகள் தனிப்பட்ட விதமான நட்டஈடு செலுத்தவேண்டியவர்களாயிருப்பர்.

டாக்டரைப் பொறுத்தமட்டில் குரூரமான தண்டனை மற்றும் சித்திரவதைகள் போன்றவற்றிலிருந்து சந்தேகநபர்களைப் பாதுகாப்பதற்கென்றே சட்டங்களுமிருக்கின்றன. ஆணோ பெண்ணோ எவராகிலும் கொலையாளியாக சந்தேகிக்கப்படுமிடத்திலும்கூட அவர்களது உயிர் மீது எவருக்கும் உரிமை கிடையாது.

பாதுகாப்பில் இருப்போர் மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்ட மற்றும் அவர்கள் மரணமடைந்ததுமான சம்பவங்கள் பலவும் நிகழ்ந்துள்ளன. இவ்விதமான சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் பொலிஸாரைத் தண்டிப்பதிலும் பார்க்க அவை இடம்பெறாமல் தடுப்பதே அவசியமானது என மகாநாம மேலும் கூறுகிறார். இவ்விதமான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்படும்போதும் அவர்களைப் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்கும்போதும் எவ்விதம் அவர்களை கையாளுவது, கவனிப்பது என்பது பற்றியும் பொலிஸாருக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

பொலிஸ் காவலில் சந்தேக நபர்கள் இருக்கும்போது, பொலிஸ் அதிகாரிகள் மட்டுமன்றி சார்ஜன்ட் அதிகாரி மற்றும் நிலையப் பொறுப்பதிகாரியுங் கூட தொடர்ச்சியாகவே அவர்களை கண்காணிக்க வேண்டும் என அவர் மேலும் கூறுகின்றார்.

பொலிஸ் பாதுகாப்பிலிருக்கும் போது சந்தேகநபர்கள் மட்டில் நிகழும் விபத்து மரணங்கள் ஒரே விதமான பாணியிலேயே அமைந்திருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்க (BASL) தலைவர் உபுல் ஜயசூரிய சண்டே லீடர் பத்திரிகைக்கு எடுத்துக்கூறியுள்ளார். அவரைப் பொறுத்தமட்டில் அம்மரணங்கள் தவிர்க்க முடியாதவையாகவோ தற்செயல் விபத்து மரணங்களாகவோ இருப்பதென்பது பொலிஸாரின் தொடர்ச்சியான சாட்டுக்களேயாகும். சந்தேகநபர்கள் மீது பொலிஸார் துப்பாக்கியால் சுடுகின்றபோது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகள் இருந்துங்கூட அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று கூறும் அவர் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த சில அதிகாரிகள் இவ்விதக் குற்றச் செயல்களிலிருந்து தமக்குச் சட்டரீதியான விலக்குரிமை அளிக்கப்பட்டிருப்பது போன்ற ஒரு கலாசாரத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதுபோல் தெரிவதாகவும் தற்போதுள்ள நிலையில் பொலிஸார் மீதான நம்பகத் தன்மையும் கேள்விக்கிடமானதாகவே இருப்பதாகவும் தெளிவுபடுத்துகிறார்.



அண்மைக்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மட்டில் பொலிஸாரின் கூற்றுக்களைப் பார்த்தால் அவற்றில் நம்பகத்தன்மை சிறிதுமில்லை என்பது தெளிவு. பொலிஸார் மட்டில் சட்டங்கள் செல்லுபடியற்றவையாகவே தோன்றுகிறது என அவர் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

அரசும் சட்டத்தை நிலைநாட்டும் அதிகார மையங்களும் பொலிஸாரால் கொல்லப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிரானவர்களாகத் தோன்றுவதால் அவர்களது குடும்பங்கள் தரப்பு வாதமெதுவும் எடுபடப்போவதில்லை என ஜயசூரிய சுட்டிக்காட்டுகிறார். சட்டமா அதிபரும் நீதிபரிபாலனமுங்கூட அவர்களது கோரிக்கைகளை அசட்டை செய்யும்போது அப்பாவி மக்கள்தான் என்ன செய்ய முடியும். சிறைக்கூடத்திலுள்ளேயுங்கூட கொலைகள் இடம்பெறுவதான அறிக்கைகளும் உள்ளன என்று கூறும் ஜயசூரிய பொலிஸார் சட்டங்களை மீறும்போது உயர் அதிகாரமையங்கள் வாய்மூடி மௌனமாகவே இருப்பதாகவும் கூறுகிறாா. நீதிபரிபாலன அதிகார மையங்கள் நாட்டில் செயற்படுவதற்கு வலுவற்றுப் போயுள்ளன என்பதே அவரது கருத்தாகும்.

அதேநேரம் பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. அஜித் ரோஹன சண்டேலீடர் பத்திரிகைக்கு கூறும்போது, பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் போதோ அல்லது பாதுகாப் பிலிருந்து தப்பியோடும் போதோ கொல்லப்பட்ட சந்தேகநபர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள், விடயங்கள் அனைத்தையும் நீதிமன்றம் செவிமடுத்துக் கேட்கிறது. சட்ட வைத்திய அதிகாரி (JMO) உடைய மருத்துவ சான்று அறிக்கை உட்பட சமர்ப்பிக்கப்படும் சாட்சி ஆதாரங்களனைத்தையும் மதிப்பீடு செய்தே குறித்த உயிரிழப்புச் சம்பவம் நியாயமான கொலையா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் என அவர் விளக்குகிறர்ர். எடுத்துக்காட்டாக, முன்னர் நிகழ்ந்த சம்பவங்களிலொன்று பற்றிய நீதிமன்ற ஆணையின் பேரில் ஏழு பொலிஸ் அதிகாரிகள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு சம்பவத்தில் பிரதான சந்தேக நபரது உயிரிழப்பு நியாயமான ஒரு கொலை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்களில் பலவும் சந்தேக நபர் கொலை செய்வதற்குப் பயன்படுத்திய ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றப் போகும் போதோ அல்லது சட்டப்படி சாட்சியமொன்றைப் பெற்றுக்கொள்ள முயன்ற போதோ தான் இடம்பெற்றவை என்ற ரோஹனவின் விளக்கம் பொலிஸாரைப் பாதுகாக்கும்படி அவர்கள் சார்பானதாகவே இருக்கிறது. அவரைப் பொறுத்தமட்டில் இது போன்ற பல சம்பவங்களும் நியாயமான விசாரணைகளாகவே சட்ட நீதிமன்றங்களில் பகிரங்கமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டவையாக இருக்கின்றன. மேற்கொண்டும் அவர் கூறுகையில்,

பொலிஸ் பாதுகாப்பிலிருக்கும்போது உயிரிழந்த சந்தேகநபர்களது குடும்பங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவது தங்களது பொறுப்புக்குரிய ஒன்றல்ல என்றாலும் அவர்கள் அவ்விதம் விரும்பினால் பொலிஸாருக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யும் சுதந்திரமும் உரிமையும் அவர்களுக்கு உண்டெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் இதுபோன்ற பல எண்ணுக் கணக்கற்ற சம்பவங்கள் போர்க்கால சூழ்நிலையில் பெரும்பாலும் பத்திரிகை வாயிலாக அறியப்படாமலும் பகிரங்கமாக ஆராயப்படாமலும் மௌனிக்கப்பட்ட ஓர் துன்பியல் வாழ்வாகவே சிறுபான்மையினர் மட்டில் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

போர் முடிவுக்கு வந்த பின்னருங்கூட வடக்கு கிழக்கு பகுதிகளிலும் இந்நிலையே தொடர்ந்துமிருக்கிறது. இருப்பினும் கொழும்பு பத்திரிகைகள் வழியாக பகிரங்கப்படுத்தப்படும் தென்பகுதி விடயங்கள் சட்டத்துறை ஆய்வுகளாகவும் பொலிஸ் மற்றும் படைத்துறை விளக்கங்களாகவும் வெளிவரும் அதேநேரம் இவ்விதமான வடகிழக்கு விடயங்கள் பற்றி கொழும்பு ஊடகங்கள் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமின்றி போர்க்கால சூழ்நிலை அச்சங்களிலிருந்து இன்னும் விடுபடாத பாதிக்கப்பட்ட அநேகமான அப்பாவிக் குடும்பங்கள் தற்போதைய சமாதான சூழ்நிலை என்றழைக்கப்படும் நிலைமைகளிலும் தமக்குரிய நீதியை உள்ளக நீதிமன்றங்கள் மூலம் கோரி பெற்றுக்கொள்ளும் துணிச்சலோ வழிவகையோ அல்லது வழிவகையோ இல்லாமல் தொடர்ந்துமிருப்பது பரிதாபத்திற்கும் கேள்விக்குமுரிய விடயமாகவே இருக்கின்றது.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசஷ்டி

(சாவகச்சேரி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலயம் வன்னி யுத்தத்தின் போது சேதமடைந்து தற்போது புனர் நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கந்தசஷ்டி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து 7 தினங்கள் காலை, மதியம் விசேட பூசைகள் இடம்பெற்று கடைசி நாள் பாரணை விரத வழிபாடு இடம்பெறும்.

தினம் மதிய பூசையை அடுத்து கந்த புராண–சூரபத்மன் வதைப்படலம் முற்றோதல் நடைபெறும்.

ஆலயத்தின் கட்டட வேலைகள் நிறைவுபெறாததன் காரணமாக சூரசங்கார நிகழ்வு இவ்வருடம் நடைபெறாது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-2-29)

# விவசாயிகளுக்கு உரவகையை கொடுப்பதில் காலதாமதம் ஏன்?

## கிளி.மாவட்ட விவசாயிகள் கேள்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கான உரவகைகள் மற்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் அதற்கான முன்னாயத்தஏற்பாடுகள்எதுவும் இடம்பெறவில்லையெனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளைகமநலதிணைக்களம் கமநலசேவை பகுதியினரின் அனுசரணையுடன் கமக்கார அமைப்புக்கள் என்ற பெயரில் குருநாகல் மாவட்டத்தில் கூட்டெரு தயாரிப்பதற்காக சிலர் சென்றுள்ளனர்.

அந்தகூட்டெருதான் இங்கு கொண்டு வரப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதா? என விவசாயிகள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கமக்கார அமைப்புத் தெரிவு இடம்பெற வேண்டுமென பல தடவைகள் விவசாயிகள் கோரிய போதிலும் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்களே கமக்கார அமைப்பு தெரிவை செயற்படுத்த வேண்டுமென கிளிநொச்சிமாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மேற்படி அமைப்பை தெரிவது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்த போதிலும் இதுவரை எதுவித முன்னாயத்த வேலைகளும் முன்னெடுக்கப்படவில்லையென விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் தற்போது பயிற்சி பெறுவதற்கென அழைத்துச்செல்லப்படுவோர் பயிற்சி பெற்ற பின்னர் அதனை விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துதல் அல்லது நடைமுறைப் படுத்துதல் போன்ற விடயத்தில் அக்கறைப்படுவார்களா? எனவும் விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்த பயிற்சி விடயத்தில் காட்டிய அக்கறை போல் விவசாய நடவடிக்கைக்கு தேவையான உரவகைகளை பெற்றுக்கொடுப்பதில் கவனமெடுக்காதது ஏன் என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் இருப்பதும் வீவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலான நடவடிக்கைகளில் இதுவரை முன்னேற்பாடுகளை செய்யாது இருப்பதும் கவலை அளிப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-254)

வன்னி வலம்

## விபத்தில் யுவதி காயம்

(குருமன்காடு)

தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளிலும் மோதிய விபத்தில் யுவதி ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா–கண்டி வீதியிலிருந்து நகரை நேர்க்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து பஸார் வீதி நோக்கி வாகனத்தை திரும்பிய போது அதே வழியில் பின்னால் வந்த தனியார் பேருந்து மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

பேருந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)

## மோட்டார்சைக்கிள் விபத்தில் பாலகன் பரிதாப மரணம்

(கிளிநொச்சி)

மோட்டார் சைக்கிள் பாலத்துடன் மோதிய விபத்தில் இரண்டு வயது பாலகனின் உயிர் பிரிந்தது.

இவ்விபத்தில் விசுமடு பிரமந்தனாறு மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த ஜீவானந்தன் கம்சன் (வயது 2) என்ற பாலகன் உயிரிழந்தார். இச்சம்பவம்நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கல்மடு ஐந்து இலாம்புச்சந்தியிலுள்ள பாலத்தடியில் இடம்பெற்றது.


இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மயில்வாகனபுரத்திலுள்ள தனது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் வேளை தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிளில் வட்டக்கச்சி மாயவனூருக்கு சென்றுள்ளனர். அங்கு உறவினர் வீட்டில் தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் மாலை வீடு திரும்பியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் குறித்த பாலத்தை அண்மித்த வேளை பாலத்துடன் மோதுண்டதில் பாலகன் அவ்விடத்தில் தலை சிதறி உயிரிழந்தான்.

தந்தையார் சிறுகாயங்களுக்கு உள்ளான நிலையில் உயிர் தப்பியுள்ளார். உயிரிழந்த பாலகனின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2-271-277)





அழிந்து வரும் பாரம்பரிய பயிரினங்களைப் பாதுகாக்கவென வடக்கு விவசாய அமைச்சால் வீரியம் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க நிகழ்வு நேற்றைய தினம் முழங்காவில் ஜெயபுரம் வடக்கு பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விவசாயிகளுக்குப் பாரம்பரிய பயிரினங்களின் விதைகளை வழங்குவதை படங்களில் காணலாம்.

## வீதிகளை புனரமைப்பதற்கு போதியளவு நிதியில்லை

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை சுட்டிக்காட்டு

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு போதியளவு நிதி, வீதி புனர மைப்பு சபையிடம் இல்லையெனவும், இதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நிதியுதவி கோரியுள்ளதாகவும் பிரதேச சபை செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, பெரியகுளம், பச்சடம்பன் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் பயணங்களை மேற்கொள்வதில் தாங்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், மழைக் காலம் ஆரம்பித்துள்ளமையால் பயணங்கள் மேலும் சிரமமாகலாம் எனவும் அப்பகுதி மக்கள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில்இது தொடர்பில் பிரதேச் சபை செயலாளர் கூறுகையில்,

பச்சடம்பன் வீதி 7 கிலோமீற்றர் நீளம் கொண்டதுடன், அவற்றில் 1.4 கிலோமீற்றர் வீதி கடந்த 2011ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின கீழ் 7 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டது. மிகுதி வீதி புனரமைப்பதற்கு நிதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. கிடைக்கப்பெற்றதும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வோம்.

எமது புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் 484.3 கிலோமீற்றர் நீளமுடைய 200 வீதிகள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலான வீதிகள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றன.

வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவணங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## நந்திக்கடல் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குகின்றன



முல்லைத்தீவு, வட்டுவாகல், நந்திக்கடலிலுள்ள மீன்கள் தொடர்ந்தும் இறந்த நிலையில் கரையொதுங்குவதனால் அப்பகுதி மீனவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இரண்டாம் திகதி முதல் இரு வாரங்களாக குறித்த கடலில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வந்தன. இதனால், நந்திக்கடலில் மீன்பிடிப்பதற்கு அங்குள்ள மீனவர்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

சிலாப்பி, கௌிர், மணல், மன்னா, கூறல் உள்ளிட்ட மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியிருந்தன. இவ்வாறு இறந்த நிலையில் கரையொதுங்கும் மீன்களை வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் மீன்பிடிக் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் துப்புரவு செய்து வருகின்றனர். எனினும், நந்திக்கடலிலுள்ள மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதால் துர்நாற்றம் வீசுவதுடன், சுற்றுப்புறச் சூழல் மாசடைவதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-2)

## பால்நிலை சமத்துவம் தொடர்பில் தெருவழி நாடக ஆற்றுகைகள்

(கிளிநொச்சி)

SDCமற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனும் அக்செட் நிறுவனத்தின் அனுசரணையுடனும் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகம் என்பவற்றின் வழிகாட்டலுடனும் கரைச்சி பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தினால் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும் பாடசாலைகளிலும் பால் நிலை சமத்துவத்தை ஊக்கப்படுத்தல் எனும்தொனிப் பொருளில் தெருவழி நாடகங்கள் ஆற்றுகைப்படுத்தப்பட்டுவருகின்றன.

ஆறுமாதகாலப்பகுதியைக் கொண்ட இத்திட்டத்தில் இதுவரை 40 நாடகங்கள் ஆற்றுகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நாடகத்தின் ஊடாக சிறுவயதில் இருந்து ஆணுக்கு பெண் சமமானவர் என்பதையும் ஆண் பெண் சமத்துவத்தின் ஊடாக பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளை சமூகத்தில் இருந்து இல்லாதொழிக்கமுடியும்என்ற நோக்கிலும் இந்நாடகங்கள் ஆற்றுகைப்படுத்தப்பட்டு வருகின்றன.



இதன் மூலம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்கள் நன்மை அடைவர். (அ-2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறத்தலை, விலங்குகள் மனிதனுக்கு விட்டு விடுகின்றன
– சார்லஸ் செர்லட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்ட கதி இதற்கும் வேண்டாம்

கூட்டுறவு என்ற உயரிய சொல் தமிழ்மொழியில் பலமான பொருள் தருவது. கூட்டுறவு என்பது ஒற்றுமையின் சேர்க்கை எனலாம். ஒரு காலத்தில் கூட்டுறவு மூலமாக மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர்.

இத்தகைய கூட்டுறவின் நிறுவனமயப்பட்ட அமைப்பாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதயமாகின எனலாம். மக்கள் நலன் சார்ந்த செயற்பாட்டின் மூலம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எங்கும் வியாபித்தன.

மலிவு, தரம் என்பவற்றுக்கு அப்பால் கறி உப்பு முதல் உடு புடைவை வரை வெற்றுக் கொள்ளக் கூடிய இடமாகவும் சங்கக் கடைகள் இருந்தமையால், சங்கங்களுக்கான மவுசு அதிகம் எனலாம்.

இதற்கு மேலாக பங்கீட்டு அடிப்படையிலான பொருள் விநியோகங்களும் காலத்துக்குக் காலம் அரசுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட கூப்பன் முறைகளும் முத்திரை மற்றும் நிவாரண அட்டைகளும் சங்கக் கடைகளைப் பலப்படுத்தின.

கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பான சங்கக் கடைகளை ஒருகணம் நினைத்துப் பார்த்தால் நீண்ட வரிசையில் காத்து நின்ற அந்த ஞாபகங்கள் மீட்கப்படும். இத்தகைய சிறப்புடைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் கிளைகளும் இருந்த இடம் தெரியாமல் போகும் அளவில் சுரண்டல்களும் போட்டியாளர்களின் கழுத்தறுப்புகளும் சங்கங்களுக்கு மாரகமாகிப் போக, கூட்டுறவு அமைப்புத் தோற்றுப் போகவேண்டியதாயிற்று.

எந்த அமைப்பு எங்கள் உயிரைக் காப்பாற்றியதோ! அந்த அமைப்பை அழிய விட்ட மகா தவறு நடந்தமைக்கு நாம் அனைவரும் பொறுப்பு எனலாம்.

கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்ட ஆபத்தை தற்போது யாழ்–கொழும்பு பஸ் சேவை எதிர்கொண்டுள்ளது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது கட்டாயமானதாகும். யாழ்ப்பாணத்திற்கு புகையிரத சேவை ஆரம்பித்ததை அடுத்து இத்தகையதொரு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பொதுவில் யாழ்–கொழும்பு பஸ் சேவையை நடத்துகின்றவர்கள் கடன் அடிப்படையிலேயே சொகுசு பஸ்களைக் கொள்வனவு செய்து இருந்தனர்.

மாதாந்தம் செலுத்த வேண்டிய கடன் பணம் என்பதற்கு அப்பால், வழி அனுமதிப் பத்திரத்திற்காக பெரும் தொகைக் கட்டணங்களும் செலுத்த வேண்டி உள்ளது.

எனினும் யாழ்– கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சொகுசு பஸ் சேவை வெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

புகையிரத சேவை தேவை என்பது உண்மையாயினும் அதற்காக ஏலவே சேவையில் ஈடுபட்டிருந்த பஸ் சேவை செயலிழந்து போவது எந்த வகையிலும் அனுமதிக்கப்படலாகாது. எனவே புகையிரத சேவையும், யாழ்–கொழும்பு பஸ் சேவையும் சமகாலத்தில் சிறப்பாக நடந்தேறுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். புகையிரத சேவை ஆரம்பித்துவிட்டது என்பதற்காக, பஸ் சேவை எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று நினைப்பது எங்கள் முதலீட்டாளர்களைப் பாதுகாக்கத் தவறுவதாக அமையும்.

எனவே புகையிரத சேவை இல்லாதபோது, யாழ்–கொழும்பு; கொழும்பு–யாழ் பயணச் சேவையை சிறப்பாகச் செய்த தனியார் பஸ் சேவை உரிமையாளர்களைப் பாதுகாத்து அவர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதற்கான உத்தரவாதங்களை வழங்க வேண்டும்.

இதற்காக யாழ்–கொழும்பு பஸ் சேவையில் ஈடுபடுவதற்கான வழிப் பயண அனுமதிக் கட்டணங்களை நீக்குவது பற்றிச் சிந்திப்பது பொருத்துடையது.

புகையிரத சேவை யாழ்ப்பாணம் வரை இடம் பெறுவதைக் காரணம் காட்டி இத்தகையதொரு விசேட சலுகைத் திட்டத்தை அமுல்படுத்துவது எங்கள் மண்ணில் நம்பிக்கையோடு தொழில் முயற்சியில் ஈடுபட்டவர்களைக் காப்பாற்றுவதற்கு அவசியமானதாகும். இதுவிடயத்தில் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என நம்பலாம்.

# சைவ சித்தாந்தத்தின் சிவஞானபோதத்தை உலகம் அறிய செய்தவர் மெய்கண்டதேவர்

**மெய்கண்டதேவரின் குருபூசை தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு மேற்படி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

சம்பந்தராலும் நாவுக்கரசராலும் பாடல்பெற்ற இடமாகிய திருப்பெண்ணாகடத்தில் அச்சுதக்களப்பருக்கு மகனாக அவதரித்தவரே மெய்கண்டதேவர். இளமைப்பெயர் சுவேதனப்பெருமாள்.

இவரை மாமனார் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்றார். இவரது காலம் பற்றி நோக்கும்போது சிலர் 13ஆம் நூற்றாண்டு எனக்குறிப்பிடுகின்றனர். ஆனால் அருணந்தி சிவாச்சாரியாரின் சமகாலமாகும். இருப்பினும் 49 மாணவர்களை வைத்திருந்தார். மனவாசகம் கடந்தார். அருணந்தி சிவாச்சாரியார், சிற்றம்பல நாடிகள் முதன்மையானவர்கள். திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையாரை குலதெய்வமாகக்கொண்டுதனது நூலில் பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே என்று குறிப்பிட்டார்.

ஒருமுறை பரஞ்சோதி முனிவர் திருக்கைலையில் இருந்து பொதிய மலைக்கு ஆகாயமார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது திருவெண்ணெய் நல்லூரில் மேலே விமானம் வந்தபோது தடைப்பட்டது.

அதனால் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொள்ளத்தக்கவர் இருக்கிறார் என்பதனை திருவருளால் உணர்ந்து கீழே இறங்கி குழந்தை சுவேதனப் பெருமாளை கண்டார். முப்பொருள் உண்மையை ஈராண்டு பிராய குழந்தைக்கு உபதேசிக்கின்றார்.

தமிழில் மெய் கண்டார் என தீட்சா நாமம் கொடுக்கின்றார். அன்று முதல் மெய்கண்ட தேவரானார்.

சிவஞானபோதம் எனும் சைவ சித்தாந்த முதல் நூலை இவ்வுலகிற்கு அருளிச் செய்தார். 12 சூத்திரங்கள், 4 இயல்களை உள்ளடக்கியதாகும். பிராமணவியல், பயனியல், இலக்கணவியல், சாதனவியல் ஆகும். இவை பதி, பசு, பாசம் போன்றவற்றை விளக்குகின்றன.

சிவஞான போதத்திற்கு விரிவுரையாக சிவஞான சித்தியாரை அருணந்தி தேவர் செய்யுள் வடிவில் உலகிற்கு வழங்கினார். தனது சீடரான அருணந்திக்கு ஆசிரியத் தன்மை வழங்கி ஐப்பசி திங்கள் சுவாதியில் சிவபரிபூரண நிலை எய்தினார்.

**கு.கோபிராஜ்**
**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.**

## தனியார் பேருந்துக்கள் மோதி விபத்துக்குள்ளாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.தனியார் போக்குவரத்துக்கு சொந்தமான இரண்டு தனியார் பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9.40 மணியளவில் வேலணை வங்களாவடியில் இடம்பெற்றது.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பேருந்தும் குறிகாட்டுவானியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பேருந்தும் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட போது இவ் விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் இரு பேருந்துகளிலும் பயணித்த பயணிகளுக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படவில்லை.

இவ்விபத்துச் சம்பவம் ஏற்பட பேருந்துச் சேவைகளுக்கிடையிலான போட்டியே காரணமென இரு பேருந்துகளிலும் பயணித்த பயணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-7-283)

## முன்பள்ளி சிறார்களுக்கு நுணாவிலில் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொது நூலகத்தினர் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு வகையான போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை அந்தந்த முன்பள்ளிகளில் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து முன்பள்ளி மாணவர்களையும் பங்குபற்றுமாறு நுணாவில் பொது நூலகப் பொறுப்பாளர் இ.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார். (இ-7-29)

## மாற்று வழிகளை பயன்படுத்துங்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் கந்த சஷ்டி விரதத்தினை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினமும் பிற்பகல் 5.30 மணி தொடக்கம் பிற்பகல் 6.30 மணிவரை சுவாமி வெளிவீதியுலா வரவுள்ளதனால் குறித்த நேரங்களில் கோயில் வீதியில் பயணிப்பவர்கள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (இ

**அமைதியின் சொற்கள்**

நீங்கள் நேரத்தின் அடிமை, நேரம் உங்களைப் பிடித்துக்கொண்டிருக்கின்றது.என்னிடம் நேரம் இல்லை என்று எண்ணுகிறீர்கள் என்று நேரம் உங்களைவிட்டுவிடுமோ அன்று உங்களிடம் ஒன்றுமே இருக்காது. *பிரேம்ரவதி*

## பொது நூலகத்தில் வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கு பயன்தரு படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை பிற்பகல் 3 மணி – 5 மணி வரை இப்படக் காட்சி அனலைதீவு பொது நூலக மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் வாசகர்கள் எனப் பலரும் பங்குபற்றமுடியும் என நூலக சமூகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## ஓய்வுபெற்ற அதிபர்கள் தவறாது தொடர்பு கொள்ளவும்

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த 01.07.2008 ஆம் திகதியில் இருந்து ஓய்வுபெற்ற யாழ்ப்பாண கல்வி வலய அதிபர்கள் இலங்கை அதிபர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பு தொடர்பாக தங்களின் சுயவிபரக்கோவைகள் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளதனால் 31.10.2014ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரிய நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ

## நீதி நூல் மனனப்போட்டி யாழ்.இந்துக் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் சைவசமய அபிவிருத்திக் கழகம் வருடந்தோறும் நடத்திவரும் நீதிநூல் மனனப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தரம் 1, 2 மாணவர்களுக்கு நடைபெறும் இம்மனனப் போட்டியில் பங்குபற்றவுள்ளவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவசமய அபிவிருத்திக்கழக பரீட்சைச் செயலர் [illegible] அறிவித்துள்ளார். (இ-3)

## நலன்புரிச் சங்கத்தின் சர்வதேச ஓய்வூதியர் தினம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தின் சர்வதேச ஓய்வூதியர் தினம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியிலமைந்துள்ள மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச தலைமைக் காரியாலய சேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சகல வங்கி ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பிரேரணைகளாக நிறைவேற்றப்பட்டு உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்க ஆவன செய்யப்படவுள்ளது. (இ-3)

**இஸ்லாம் ஆன்மீக சிந்தனை**

**வீட்டை சுத்தமாக்குங்கள்**

★ பரிசுத்த நினைவின் காரணமாக எத்தனையோ சிறிய நன்மைகள் பெரிய நன்மைகளாக ஆகிவிடுகின்றன.

★ பரிசுத்த எண்ணமில்லாத காரணத்தினால் எத்தனையோ பெரிய நன்மைகள் அற்பக் காரியங்களாகிவிடுகின்றன.

★ அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்தத்தையே விரும்புகிறான். எனவே, உங்கள் இல்லங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

★ எவர் பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்காக அப்பள்ளிவாசலைப் போன்ற வீடு சொர்க்கத்தில் கட்டப்படுகின்றது.

★ இறைவனை நீ பார்ப்பது போல் பயந்தவனாகத் தொழு! அவனை நீ பார்க்காவிட்டாலும் உன்னை அவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.

★ ஏழைகளின் துஆ (பிரார்த் தனை) இல்லை என்றால் செல்வந்தர்கள் அழிந்தே போவார்கள்.

★ ஒருவருக்கு பொருள்வசதி இருந்தும் ஜகாத் (ஏழைவரி) கொடுக்கவில்லையானால் அவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் வானவர்கள் நரகத்தைப் பற்றி எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் களத்தில் மீண்டும் ஷேவாக்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் மீண்டும் களமிறங்கவுள்ளார்.

தொடர் தடுமாற்றத்தால் கடந்த 2013ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் விளையாடிய தொடக்க ஆட்டக்காரரான ஷேவாக், அவரது டில்லி அணியின் சக வீரரான ஷிகர் தவானால் அணியில் இருந்து கைவிடப்பட்டார்.


இந்நிலையில் இந்திய கிரிக்கெட் வாரிய அறிவிப்பின் படி தகுந்த உடற்தகுதியுடன் இருந்தால் மீண்டும் இந்திய அணியில் மீண்டும் ஷேவாக் இடம் பிடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தொடக்க ஆட்டக்காரர்களுக்கான பட்டியலில் முரளி விஜய், தவான் இருக்கின்றனர்.

3ஆவது இடத்திற்கு ஷேவாக் இருக்கிறார்.

இவருக்கு போட்டியாக இங்கிலாந்து எதிரான தொடரில் வாய்ப்பளிக்கப்பட்ட கம்பீர் உள்ளார்.

இருப்பினும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டிகளில் ஷேவாக் சிறப்பான சாதனைகளை புரிந்துள்ளதால் அவருக்கு வாய்ப்பு கொடுக்கப்படலாம். இந்த தொடரில் இருந்து இந்திய அணியின் இளம் வீரர்களான மனன் வோரா மற்றும் உன்முக்த் சந்த் ஆகியோர் கழற்றிவிடப்பட்டுள்ளனர். (க)

# சுவிஸ் டெனிஸ் நடால் வெற்றி



சுவிஸ் உள்ளரங்கு டெனிஸ் சம்பியன்ஷிப் தொடரின், ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) வெற்றி பெற்றார். முதல் சுற்றில் இத்தாலி வீரர் சைமன் போலெல்லியுடன் நேற்றுமுன்தினம் மோதிய நடால் 6,2, 6,2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

காயம் கார்ணமாக நீண்ட ஓய்வில் இருந்த பின்பு மீண்டும் களமிறங்கிய போட்டியில், முதல் சுற்றில் எளிதாக வென்றது உற்சாகமளிப்பதாக நடால் கூறியுள்ளார். குடல்வால் பிரச்சினை காரணமாக அவதிப்பட்டு வரும் அவருக்கு, மிக விரைவில் அறுவை சிகிச்சை செய்யப்பட்வுள்ளது.

எனினும், அடுத்த மாதம் லண்டனில் நடைபெற உள்ள ஏடிபி உலக டூர் பைனல்ஸ் தொடருக்கு முன்பாக, முழு உடல்தகுதியுடன் களமிறங்கத் தயாராகிவிட முடியும் என்று நடால் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்த தொடரில், டாப் 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்க முடியும் என்பது

# இலங்கை கிரிக்கெட்டின் உபதலைவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள புல் தரையிலான கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நேற்றுமுன் தினம் புதன்கிழமை பகல் இலங்கை கிரிக்கெட்டின் உப தலைவர் லயன் மொகான் டி சில்வா மற்றும் மாவட்டங்கள் மாகாணங்களின் இணைப்பாளர் சித்தார்த் பெர்ணான்டோ ஆகியோர் நேரில் வந்து பார்வையிட்டனர். யாழ் மாவட்டத்தில் முதல் தடவையாக புல் தரையிலான கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இலங்கை கிரிக்கெட் அமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட புல் தரையிலான மைதானம் எதிர்வரும் 29ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்படும். அன்று ஒரு கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் உப அதிபர் மற்றும் கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர் நிசாந்தன் மாவட்ட இலங்கை கிரிக்கெட்டின் பயிற்றுநர் லக்சிகா, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் சந்திரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். இதே வேளை - யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ்.மாவட்ட வீரர்களும் தேசிய அணியில் இடம் பெறவேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்திலும் புல்தரையிலான கிரிக்கெட் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட்டின் உப தலைவர் மொகான் டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் - யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்படும் புல்தரையிலான கிரிக்கெட் ஆடுகளத்திற்கு இலங்கை கிரிக்கெட் அமைப்பினால் இருபத்தைந்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது போன்று யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் அமைப்பிற்கும் கழகங்களின் வளர்ச்சிக்காக பதினைந்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் இந்த புல் தரையிலான கிரிக்கெட் ஆடுகளத்தை அமைக்க யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் நிசாந்தன் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சிகா தமது பங்களிப்புக்களை முழுமையாக செய்துள்ளார்கள். இதன்மூலம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும் இனம் காணப்பட வேண்டும் வளர்த்தெடுக்கப்படவேண்டும். தேசிய மட்டத்தில் அவர்களுடைய பங்களிப்புகளும் இடம்பெற வேண்டும் என்றார். (க)

விளையாட்டுச் செய்திகள்

# இந்திய தொடரிலிருந்து சங்கா விலகல்



இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக் காரா காயம் காரணமாக இந்திய அணியுடனான தொடரில் இருந்து விலகு வதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அணி அடுத்த மாதம் இந்தியா சுற்றுப்பயணம் செய்து 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடந்து வருகிறன.இந்நிலையில் பயிற்சியின் போது சங்கக்காரா காயம் அடைந்து இருப்பதாகவும், இந்த காரணத்தால் அவர் இந்த தொடரில் பங்கேற்பது சந்தேகம் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுபற்றி இலங்கை அணியின் தெரிவு குழு தலைவராக உள்ள சனத் ஜெயசூரியா ஆங்கில இணையத்தளம் ஒன்றிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, சங்கக்காரா இந்த தொடருக்கு உடல் தகுதியுடன் இல்லாவிட்டால் அவருக்கு பதிலாக நிரோஷன் டிக்வெல்ல அணியில் இடம்பெறுவார்.சில காலங்களாக இலங்கை அணி வீரர்களின் காயம் காரணமாக பாதிக்கப்பட்டு வருகிறது. திஸ்ச பெரோரா சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் காயம் அடைந்தார். அதே போல் அறுவை சிகிச்சை செய்து கொண்ட மலிங்கா தற்போது தான் மெதுவாக குணமடைந்து வருகிறார்.

இருப்பினும் இந்தியாவுடனான இந்த தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு அணியை தயார் செய்ய பெரிதும் உதவும் என்று கூறியுள்ளார். (க)

# முல்லயடி விநாயகர் சம்பியன்




தீபாவளியை முன்னிட்டு பச்சிலைப் பள்ளி பிரதேச தர்மக்கேணி பூதவராஜர் விளையாட்டு கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வந்த மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியானது நிறைவுக்கு வந்தது .

இந்த தொடரில் 12 பலம் பொருந்திய அணிகள் கலந்து கொண்டுள்ளன.விலகல் முறையில் நடைபெற்ற இந்த தொடரில் இறுதிப்போட்டியானது முல்லயடி விநாயகர் மற்றும் மசர் வளர்மதி அணிகள் மோதியிருந்தன. மிகவும் பரபரப்பான போட்டியில் முல்லயடி விநாயகர் அணியினர் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். அவ்அணியினரை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுநிலையில் பாகிஸ்தான்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சர்பராஸ் அகமது சதம் அடிக்க, முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 454 ரன்கள் குவித்தது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ) சென்றுள்ள அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி டுபாயில் நடக்கிறது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில், பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கு 219 ரன்கள் எடுத்திருந்தது. மிஸ்பா (34), அசாத் சபிக் (9) அவுட்டாகாமல் இருந்தனர்.

சர்பராஸ் சதம்: நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. மிஸ்பா அரைசதம் (69) கடந்தார். பின் ஆசாத் சபிக், சர்பராஸ் அகமது ஜோடி இணைந்தது. சிறப்பாக செயல்பட்ட ஆசாத் அரைசதம் எட்டினார். ஆறாவது விக்கெட்டுக்கு 124 ரன்கள் சேர்த்தபோது, ஆசாத் (89) வெளியேறினார். அசத்தலாக விளையாடிய சர்பராஸ், 80 பந்தில் சதத்தை பதிவு செய்தார். யாசிர் (2), ரகாத் அலி (0) ஏமாற்றினர். டெஸ்ட் அரங்கில் தனது 2வது சதம் அடித்த சர்பராஸ் (109) லியான் 'சுழலில்' அவுட்டானார். முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 454 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியா சார்பில் அதிக பட்சமாக மிட்சல் ஜோன்சன் 3 விக்கெட் வீழ்த்தினார்.

அவுஸ்திரேலிய அணிக்கு கிறிஸ் ரோஜர்ஸ், வோர்னர் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது. வோர்னர் அரைசதம் எட்டினார். இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 113 ரன்கள் எடுத்தது. ரோஜர்ஸ் (31), வோர்னர் (75) அவுட்டாகாமல் இருந்தனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையால் நடத்தப்படும் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும் பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் இராமநாதன் கல்லூரியும் வேம்படி மகளிர் கல்லூரியும் மோதவுள்ளன.

மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையும், மல்லாவி சென்றல் கல்லூரியும் மோதவுள்ளது. (க)

# கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்

## மாணவர் ஒன்றியம் அறிக்கை

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்கள் தொடரும் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அழைப்பாளர் நஜித் இந்திக தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமது போராட்டத்துக்கு விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளப் போவதாக ஒன்றியம் அறிவித்துள்ளது.

இறுதியாக இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒன்றியத்தினர் நடத்திய போராட்டத்தின்மீது நாடாளுன்ற பிரதேசத்தில் வைத்து கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இவ்வாறான செயற்பாடுகள் தமது போராட்டத்துக்கு தடைகளை ஏற்படுத்தாது.

தனியார் பல்கலைக்கழகங்களை மூடவேண்டும், மாலபே தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் 5000ரூபா புலமைப் பரிசில் நிறுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக பட்டங்கள் பணத்துக்கு விற்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளையே மாணவர்கள் முன்வைத்துள்ளனர். இதேவேளை கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் சித்தியெய்தாதவர்களும் 12 மில்லியன் ரூபாய்களை செலவழித்து பட்டம் பெறும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமது போராட்டத்தின்போது நேற்று முன்தினம் பொலிஸார் நடத்திய தாக்குதலில் 12 மாணவர்கள் காயமடைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கை விவகாரம்

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு சமர்ப்பித்த தனது அறிக்கை ஒன்றில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நாவின் முன்னைய மனிதவுரிமைகள் ஆணையாளரின் கீழ் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா பொதுச்சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர இலங்கை விவகாரம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில், குறிப்பிட்ட காலப்பகுதியில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு சிரியா, மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகள் மீது விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட இம்மூன்று நாடுகள் தொடர்பில் மூன்று விசேட குழுக்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் பாலஸ்தீனம், எரித்திரியா மற்றும் ஈராக் குறித்தும் விசாரணைகள் இடம்பெறலாம்.

நான் கடந்த மாதம் பதவியேற்ற போது பெரும் நிதிப்பற்றாக் குறைக்கு ம்த்தியிலும் எனது அலுவலகம் முன்னெடுத்துள்ள பணிகளை பார்த்து ஆச்சரியம் அடைந்தேன்.

ஐ.நாவின் முக்கிய தூண்களில் ஒன்றான மனிதவுரிமை விவகாரங்களுக்கு மிக குறைந்தளவு வளங்களே தற்போது கிடைக்கின்றன. ஏனைய துறைகளுக்கு வழங்கப்படுவதை விட குறைவாகவே மனிதவுரிமை விவகாரங்களுக்கு வழங்கப்படுகின்றது. இது தொடரமுடியாது.

மனிதவுரிமைகள் மீறப்படும் போது துஷ்பிரயோகங்களும், மீறல்களும் பாரிய மோதல்களை உருவாக்கும் போது, சகல வகைகளிலும் இழப்புகள் மிகப் பெரிதாகக் காணப்படுகின்றன.

மனிதவுரிமை மீறல்களை கண்டுபிடித்து எச்சரிப்பதற்கான தனது அமைப்பின் திறனை அதிகரிக்க வேண்டும். ஆபத்தான சமிக்ஞைகள் வெளியானவுடன் உடனடி நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# காணாமல் போனவர்களை நினைவுகூரும் தேசிய தினம்

(கொழும்பு)

இலங்கையில் காணாமற்போனவர்களை நினைவுகூரும் வகையில் தேசிய தினம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27-ம் திகதி காணாமற்போனவர்களுக்கான தேசிய தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக காணாமற்போனவர்களுக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

சீதுவை, ரத்தொளுகமை சந்தியில் உள்ள காணாமல் போனவர்களுக்கான நினைவுத் தூபி அருகே இந்த வைபவம் நடைபெறவுள்ளது.

காணாமல் போனவர்களை நினைவு கூரும் வகையில் தூபிக்கு மலரஞ்சலி செய்யவும் ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இந்த வைபவத்தில் ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

சகல சமயங்களையும் சேர்ந்த முக்கிய மதகுருமாரும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

1988-89ம் ஆண்டு காலப் பகுதியில் தென்னிலங்கையின் உள்நாட்டுக் கிளர்ச்சியின் போது 69 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் காணாமல் போயிருந்தனர்.

இது குறித்து அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ, ஜெனிவா வரை சென்று குரல் கொடுத்திருந்தார்.

எனினும் 2009-ம் ஆண்டு நடைபெற்ற விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது ஒன்றரை லட்சம் அப்பாவி மக்கள் காணாமல் போயுள்ளனர்.

இது குறித்து அரசாங்கம் எதுவித கரிசனையும் காட்டுவதாக இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். (எ-11)

# முதுகல்விமாணி பட்டப்படிப்பு தெரிவானோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால், முதுகல்விமாணி கற்கை நெறிக்குத் தெரிவானவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2014/ 2015 கல்வி ஆண்டுக்குரிய பதினொராவது பிரிவில் முதுகல்விமாணி பட்டப் பின்படிப்பை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் வெளியிட்டுள்ளார். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

பார்த்தீபன் அபிராமி, சீனிவாசகம் அஜந்தன், சீனியர் அமரஜோதி, செந்தில்குமரன் அங்கையற்கண்ணி, சண்முகநாதன் வாலாம்பிகை, பரமலிங்கம் சந்திரபாபு, ஜெயந்தன் சந்திரனிபா, நதீஸ்வரன் சந்திரிகா, முகுந்தன் தயாநிதி, விக்னேஸ்வரன் இதயனி, ஞானப்பிரகாசம் ஞானகுமார், அரியரட்ணம் ஞானேஸ்வரன், மாரிமுத்து சுப்பிரமணியம் இன்ஜசால், திருவருட்செல்வன் ஜானகி, அகமட் மொகதீன் ஜனூஸ், சகாயநாதன் ஜெனிபர், விக்னேஸ்வரமூர்த்தி ஜெர்சாதரா, யோகானந்தம் ஜெகானந்தம், சின்னத்துரை ஜெயச்சந்திரன், யோகராஜா ஜெயகாந்தன்,

கந்தையா ஜெயக்குமார், வேணுகோபால் ஜெயக்குமார், கமலேஸ்வரன் ஜெயந்தி, சந்திரகாந்தன் ஜெயந்தி, சுகிர்தன் ஜெயந்தி, சசிகரன் ஜெயசுதா, துரைசிங்கம் ஜெயதேவன், கமலதாசன் ஜெயவாணி, ஞானசேகர் கலைச்செல்வி, சபாரட்ணம் கமலராணி, வேலாயுதபிள்ளை கமலேஸ்வரன், நாகப்பர் கண்ணதாசன், பார்த்தீபன் கார்த்திகாயினி, லலீசன் கவிதா, உதயச்சந்தர் கயல்விழி, யோகானந்தம் கிருபாகரன், சிவனொளிச்செல்வன் கோமதி, முருகன் கிருஷ்ணபிள்ளை, சுந்தரம் குகனேசன், குமணன் குமுதா,

ஜெயசீலன் லங்கினி, முருகதாஸ் லோகநாயகி, பார்வதிநாதசிவம் மகாலிங்கசிவம், கிருஷ்ணராஜா மஞ்சுளா, போல்செல்வ குமார் மேரி யோசெப் அன்ரொனிகா, பசின் துரைசிங்கம் மேரி ரெஜினா, மருகை மாசிலாமணி, அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் மேஷன், நாகராஜா மகேந்திரராஜ்ா, அமீர் மிக்ராஜ், தங்கராஜா மோகன், நவரட்ணம் நவநீதன், நவரட்ணம் பரமேஸ்வரன் சோதிலிங்கம் பரமேஸ்வரி, பொன்னம்பலம் பொன்ராஜா, கருப்பையா பிரபாகரன், கிருஷ்ணபிள்ளை பிரதீபா, தங்கரூபன் பிரேமலா, துரைரட்ணம் பிரதீபன், சின்னையா ராஜரட்ணம்,

பிலிப்பையா ரட்ணராஜ், கதிர்காமு ரட்னேஸ்வரன், சிவப்பிரகாசம் ரூபன், விநாயகமூர்த்தி சக்த்யா, சந்தனலிங்கம் சசிகலா, சிவராஜா சசிதா, குகன் செல்வலக்சுமி, ரகுதாஸ் செல்வவதனி, அருணாசலம் சேந்தன், சவேரிதாசன் செல்ரன் யூட், அருளானந்தி சியாமளரூபன், நவரட்ணம் சியாமினி, சிவகுந்தன் சுபாஜினி, சிவப்பிரகாசம் சிவகுமார், சிறிதர் சிவராஜினி, சின்னையா சிவேந்திரன், தம்பிராஜா சிறிசெல்வம், ராஜதுரை சிறிதரன், கண்ணதாசன் சிறிதேவி, செகராஜசேகரம் சுகிர்தா

வாசுதேவன் சுஜாதா, ஜெயரூபன் சுமேதா, சூரியராஜா சுனித்திரா, செல்வராஜா சுரேஸ், சுதாகரன் சுதா, சஞ்சீவ் சுதாஜினி, சுதந்திரன் சுதாகரன், சிவமகேஸ்வரன் தனேஸ்வரி, சுதாகரன் தர்சினி, சின்னத்துரை தவநாயகம், பரமநாதன் தவனேசன், தயாபரன் தவனேஸ்வரி ,திருக்குமரன் தயாநிதி, ஜெயசீலன் தயாநிதி, திவ்யநாதன் தேனுகா, நடராஜா தேவராஜா, குலசிங்கம் திலீபன், சதாசிவம் துளசிதாசன், நடேசு துஷ்யந்தன்

குமரகுரு துஷ்யந்தன், ஆறுமுகம் உத யனன், பொன்னையா வாகீசன், சோமசேகரம் வளர்மதி, கிரிதரன் வனஜா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரவு செலவுத்திட்டம் இன்று...

டக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் அங்கவீனர்களின் வருமானத்தை அதிகரித்தல், கைக்குழந்தைகள், ப்ாலர் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்களின் போசாக்கை உறுதிசெய்தல், நாடு தழுவிய பசுமை நகரங்கள், அனைவருக்கும் சொந்த வீடு, தொழில்வாய்ப்பு, வட்டி வீதம் குறைப்பு போன்ற பல்வேறு கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வரவு-செலவுத்திட்டத்தின் இறுதி சரிபார்ப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்று வருவதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் பீ.பி.ஜய சுந்தர மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இது தொடர்பான ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். (எ-11)

## பயங்கரவாதத்தை தடு...

இது தொடர்பில் இந்த அறிக்கையில மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2011 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழககில் வெளியாகியுள்ள தீர்ப்பு தொடர்பில்வெளியிடப்பட்டு வருகின்ற கருத்துக்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு ஆச்சரியமடைந்துள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதியாக ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு காணப்பட்டதுடன் இடையீட்டு மனுதாரர்களாக நெதர்லாந்தும், பிரித்தானியாவும் செயற்பட்டன.

அந்தவகையில் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் இடையீட்டு மனுதாரர்களுக்கும் தொடர்ச்சியாக தகவல்களை வழங்கி வந்தோம். அதன்படி இலங்கை அரசாங்கத்தால் எவ்வளவு உயர்மட்டத்தில் செயற்பட முடியுமோ அந்தளவுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இலங்கையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடு அல்ல என்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தலையிடுவதற்கு இலங்கையின் தேசிய அபிலாஷைகளுக்கு எதிராக பல நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருந்ததாலேயே மேற்கண்டவாறு செயற்பட்டோம்.

இவ்வாறான பின்னணியில் விடுதலைப் புலிகளின் இந்த கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனைத்து தகவல்களையும் அரசாங்கம் வழங்கியது.

தீர்ப்பை வழங்கியதன் பின்னர் பிரதிவாதிகள் மற்றும் இடையீட்டு மனுதாரர்களுக்கு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு செல்லும் சந்தர்ப்பம் உள்ளது.

இந்த வழக்கில் பெயரிடப்பட்டுள்ள தரப்புக்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் பார்க்கும் போது வரையறைகளுக்கான ஒழுங்கு விதிகளை நிறைவேற்றிக் கொள்ளல், ஐரோப்பிய நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தல் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் தேசிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல் ஆகிய மாற்றுவழிகள் அவர்களிடம் உள்ளன.

விடுதலைப் புலிகளின் மீதமுள்ள பகுதியினரால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரித்தல் ஊடாக இலங்கை பிரஜைகளை அச்சுறுத்துவதிலிருநது காப்பாற்றவும், இலங்கைக்குள் மீண்டும் பயங்கரவாதம் உருவாகுவதை தடுப்பதற்கும் அரசாங்கம் குறித்த வழக்குடன் தொடர்புபட்ட தரப்பினருக்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

அத்துடன், எதிர்காலத்தில் இந்தத் தரப்புக்கள் மேற்கொள்கின்ற செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும். இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படுவையாக கருதப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பிரபாகரனின்...

நாடுகளை கொண்ட இந்த ஒன்றிய உறுப்பு நாடுகளை புலித்தடை தொடர்பான ஆவணங்களை முன்வைக்கும்படி நீதிமன்றம் கோரியுள்ளது.

இதை வைத்துதான் இவர்கள் அரசியல் செய்கிறார்கள். இந்த தீர்ப்புக்கும் எதிர்கட்சிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு இருப்பதாக கூறுகிறார்கள. இப்படி பொய்களை உருவாக்கி சொல்லும் குழுவின் தலைவர்தான் விமல் வீரவன்ச.

தேர்தலில் மக்கள் முன்னால் சென்று, நல்லாட்சியை பற்றியோ, மனித உரிமைகளை பற்றியோ, ஊடக சுதந்திரத்தை பற்றியோ, ஊழல் ஒழிப்பு பற்றியோ பேச முடியாது. இவர்களிடம் எஞ்சி இருப்பதெல்லாம், புனையப்பட்ட புலிக்கதைகள் மாத்திரமே. ஆகவேதான், இன்று இந்த அரசாங்கத்துக்கு மிகவும் வேண்டப்பட்டவராக, புலிகளின் தலைவர் பிரபாகரன் மாறியுள்ளார்.

ஆனால், இந்த முறை இந்த புலிப் பருப்பு வேகாது. நானும், விடுதலை புலிகள தலைவர் பிரபாகரனும் கிளிநொச்சி நீச்சல தடாகத்தில் நீச்சலடித்து குளித்து ஜலக்கிரீடை செய்தோம் என கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது நாடு முழுக்க சென்று பொய் பிரசாரம் செய்தவர்தான் விமல் வீரவன்ச. இது தொடர்பான இறுவெட்டு புலிகளின் அலுவலகத்தில் இருந்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது என்றும் அது தற்போது தன்வசம் இருக்கின்றது என்றும் அவர் அப்போது கூறினார்.

நாடாளுமன்றத்தில் அவரை கண்டுநான்அந்த இறுவெட்டை எனக்கும் காட்டும்படி கேட்டேன். நான் எப்படி நீச்சல் அடித்தேன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்று அவரிடம் கூறினேன். ஆனால், கடைசிவரை அப்படி ஒரு இறுவெட்டை எனக்கு அவர் காட்டவில்லை.

இப்போது அதே விமல் வீரவன்சதான், இந்த ஆட்சியின் சார்பாக, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் புலிக்கதைகளை அவிழ்த்து விட்டு பொய் சொல்லும் பணியை தலைமை தாங்கி நடத்த நியமிக்கப்பட்டுள்ளார் ஆனால், இந்த பொய்யரின் கதைகளை நம்பி ஏமாறஇந்தமுறை சிங்கள மக்கள் தயாராக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## வடக்கின்...

னார், கிளிநொச்சி, பூநகரி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தனியார் முதலீட்டில் உயரமான கட்டிடங்கள் எழுப்புதல், பேருந்து நிலையங்களை நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. வடக்கின் கடற்கரையோரமாக பல இடங்களில் கடற்கரை பூங்காக்கள் அமைக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடி மேற்பார்வையில் நடைபெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விரிவான செயதியொன்றை நேற்றைய தினமின பத்திரிகை வெளியிட்டுள்ளது. (எ-11)

## ஐ.நா ஆணை...

செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் இரண்டு தடவைகள் உறுப்பு நாடாக தெரிவு செய்யப்பட்ட நாடுகள், மூன்றாவது முறையாக தேரதலில் போட்டியிடமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வாக்குறுதியை...

நீதிமன்றத்தில் அழைக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் புகாரொன்றை மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சமர்ப்பித்துள்ளார்.

சந்தேகநபர் ஒரு வருடத்திற்கும் மேலாக வழக்கு விசாரணையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த குற்றச்சாட்டை பதிவு செய்துக்கொண்ட நீதிமன்றம், இது சம்பந்தமாக எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு அரச தரப்பு வழக்கறிஞருக்கு உத்தரவிடப்பட்டது. (எ-11)

## அத்துமீறும் மீனவர்களு...

திருக்கின்றனர்.

இது குறித்து மன்னார் மாவட்ட கடற்தொழில் சங்க சமாசங்களின் தலைவர் தெரிவித்தாவது, தற்போது குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழேயே இந்திய மீனவர்கள் சட்ட விரோதமாக இலங்கைக் கடற்பரப்பில் பிரவேசிக்கின்றார்கள் என்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்படுகின் றார்கள்.

ஆனால் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து வந்து மீன்பிடிக்கின்ற வெளிநாட்டவர்களைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள கடற்தொழில சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாங்கள் கோருகிறோம் எனக் கூறினார்.

இவ்வாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய மீனவர் சங்கத் தலைவர்களின் சட்டத்தரணி உபேந்திர குணசேகர அவர்கள், கடற்தொழில் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுகின்ற மீனவர்கள் விடுதலை செய்யப்படுகின்றபோதிலும், அவர்கள் பயன்படுத்துகின்ற படகுகளின் உரிமையாளர் இருந்தால், அவரை அல்லது அந்த படகுக்குப்பொறுப்பாக வருகின்ற ஒருவரைக் கைதுசெய்து தடுத்து வைத்து அவருக்குத் தண்டனை வழங்க முடியும், இதன் ஊடாக இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று தமது கட்சிக்கார்கள் எதிர்பார்க்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த வருடத்தில் யாழ் மாவட்ட கடற்பரப்பில் மாத்திரம் பல்வேறு சந்தர்ப்பங்களில் 420 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் மேலிடத்து உத்தரவுக்கமைய 400 பேர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும், இன்னும் 20 பேர் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் யாழ் மாவட்ட நீரியல் கடற்தொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நடராஜா கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களுடைய படகுகள் நீதிமன்றங்களினால் இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம் 2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்
கிளிநொச்சி A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால் 0771516537
யாழ்ப்பாணம் 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி முடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960
குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd (8141)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை

Day Class
A/L
வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகவுள்ளது
பொருளியலுக்காக : உதயன்
கணக்கீட்டுக்காக : பகீரதன்
வணிகக்கல்விக்காக : பிரபல ஆசிரியர்
எங்கு ? எப்போது? விரைவில்........
காலை – 8.00 மணிமுதல் 2.00 மணிவரை நடைபெறும்
(C-8839)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
After A/L What Next???
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது
Spoken English With Grammar - Quick Learning Course
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.
Diploma In English Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.
B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)
IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.
We gurantee success rate 6.5 band and above
A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)
25th Saturday 2014 @ 8.00 am
26th Sunday 2014 @ 11.00 am
27th Monday 2014 @ 9.00 am
29th Wednesday 2014 @ 3.00 pm
No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935 (C-8837)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org